889

889
4-57

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ கருணாகரன்
(மதுராந்தகம்)

3L
M57.16.6
210740

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 132
2. பகவதாராதனம் 136

[ஸ்ரீ. உப. வித்வான், புரிசை, நடாதூர், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

3. பகவத்குணாநுபவம் 140

[ஸ்ரீ: உப. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி பம்பாய்]

4. நூற்றெட்டுத் திருப்பதிகள் 142
5. நான் யார்? 144

[ஸ்ரீ. உப. அத்தி, கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்]

6. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 146
7. ஸாதுக்களின் தர்சனம் 151

[ஸ்ரீ, உப, ஜே, சேஷாத்ரி சிரோமணி ஸ்ரீ அஹோபிலமடம்]

8. "ஸஹதர்மசாரிணீ" 152

[ஸ்ரீ. உப வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

9. என்னுடை இன்னமுது 155

ஸ்ரீ. உப. அத்தி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தான அர்சகம், திருவள்ளூர்.]

ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹேட்டுகள், ரசீது புத்தகங்கள் மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில் தமிழ், ஸம்ஸ்கருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்துசெய்து கொடுக்கப்படும். மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ப்ரதாய க்ரந்தங்களை வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.

மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல முத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ஞு ஆனி மீ { ஸஞ்சிகை 6

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீநருஸிம்ஹப்ரியா ஸ்ரீந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீநருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

அஸ்தி (கடவுள் இருக்கிறார்) என்று சொல்பவர்கள் ஆஸ்திகர்கள். நாஸ்தி (கடவுள் இல்லை) என்று சொல்பவர்கள் நாஸ்திகர்கள். இவ்விதம் உலகில் உள்ள ஜனங்களில் எவனும் ஆஸ்திகனாகவோ அல்லது நாஸ்திகனாகவோ தான் இருக்கமுடியும். உண்மையும், பொய்யும் போல் வெளிச்சமும், இருட்டும் போல் மனிதத்தன்மையும், மிருகத்தன்மையும்போல் ஆஸ்திகமும், நாஸ்திகமும் தனிப்பட்டவைகளே. ஆஸ்திக்யம் நிலைத்திருக்கும் ஒருவனிடம் நாஸ்திக்யம் நிலைத்திருக்கமுடியாது. வட துருவமும், தென் துருவமும்போல் மாறுபட்டவைகள் இவைகள்.

சரீராத்மஸம்பந்தங்களாகிய மதவிஷயங்களைப் பற்றி யோசிக்கும் ஸமயத்தில் ஆஸ்திக்யத்திற்கு இடமுண்டு. நாஸ்திக்யத்திற்கு இடமில்லை. பரிமிதமான அறிவையுடைய நாஸ்திகவாதிகள் சரீராத்மஸம்பந்தத்தை நன்கு அறியமுடியாதவர்கள்தான். இதனால்தான் இவர்கள் தங்களைவிட மேதாவிகளாகிய ஜ்ஞானிகளின் மொழிகளை, வேதத்தின் நுட்பங்களை ஒப்புக்கொள்ளமுடியாதவர்களாகிறார்கள். இவ்விதமான நாஸ்திகர்களின் ஸமூஹத்தில் சேர்ந்தவர்கள்தான் பௌத்தர்கள், ஜைனர்கள், சார்வாகர்கள். இவர்களில் அதமாதமர் சார்வாகர்கள். ஒருவருடைய சரீர பலத்தினாலும் மனோ பலத்தினாலும் கஷ்டப்பட்டு தன் ஸந்ததிகளுக்கென்று சேமித்துவைக்கப்பட்டிருக்கும் ஸொத்தை அடைந்திருப்பவர்களை வெறுப்பவர்கள் சார்வாகர்கள். (திருப்பிக்கொடுக்க வேண்டாம் என்ற மனோபாவத்துடன்) கடன் வாங்கியாவது, ருசித்துண்டு உழல்பவன் சார்வாகன். இவனுக்கு சரீரதர்மம் ஒன்றுதான் உண்டு. சரீரதர்மத்தையே ப்ரதான நோக்கமாகக் கொண்டவனுக்கு உண்மையான ஸமூஹதர்மம் இருப்பது கடினந்தான். ஆகவே ஸமூஹத்தில் சார்வாகர்கள் அதிகரிப்பின் அந்த ஸமூஹத்தின் நிலை மிருகங்களின் ஸமூஹநிலையையே ஒக்கும் என்பது மிகையாகாது.

சர்வாகானைப்போலில்லாமல் ஸமூஹநலனை மனத்திற்கொண்ட இயக்கங்கள் பௌத்த, ஜைன மதங்கள். இவைகளில் உள்ள குறைப்பாடென்பது ஆத்மதர்மங்களை உணராமல் இருப்பது தான். சரீரதர்மத்தைப் போன்ற முக்யமான தர்மம் ஆத்மதர்மம் என்பதை இவர்கள் உணர்வதில்லை. யோசித்துப் பார்த்தால் சரீரதர்மத்தைக் காட்டிலும் ஆத்மதர்மமே உயர்ந்ததென்று கொள்ளுதல் மிகவும் அவசியம். ஆத்மதர்மத்தை உணர்ந்தவன்தான் ஸமூஹதர்மத்தை உணரமுடியும். சரீரதர்மத்தை மட்டில் உணர்வதென்பது தன் சரீரத்தை மட்டில் உணர்ந்து போற்றுவதாகும். ஆத்மதர்மத்தை உணர்பவன் சரீரத்திற்கு மேற்பட்ட ஆத்மாவையும், அதுபோலவே ஸமூஹத்தையும் நன்கு உணரமுடியும். இவ்வித உண்மைகளை அறிந்தவர்கள்தான் நமது முன்னோர்கள்.

பௌத்தமதமானது 2,000 வருஷத்திற்கு உட்பட்டது. ஜைனமதம் அதைவிட ஒரு நூற்றாண்டு முற்பட்டதாகலாம். இவைகளை எல்லாம் காட்டிலும் ப்ராசீனமானதுதான் வைதிசமதம் எனப்படும் இந்துமதம். உண்மையை நோக்கினால் இந்துமதத்தின் கொள்கைகள்தான் இதர இரண்டு மதங்களிலும் உள்ளன. அதாவது உண்மைத்தத்துவங்கள் இந்து மதத்தைப் பின்பற்றியவைகள்தான். **अहिंसा परमो धर्मः'** அஹிம்ஸையே உயர்ந்த தர்மம்

என்பது இந்துமதத்தின் அடிப்படையான வேதவாக்யந்தானே.

வேதத்தில் உள்ள யாக ஸம்பந்தமான வாக்யங்களை ஹிம்ஸாபரமாகக் கொண்ட பௌத்தனும், அவருடைய சீடர்களும், மாம்ஸ போஜனத்தை நிஷேதிக்காமல் ஏற்றுக்கொள்வது எவ்வளவு நியாயமான கார்யம் என்பதை அறிவாளிகள் தான் யோசித்தல் வேண்டும்.

அதாவது, யாகத்தில் சொல்லப்படும் மிருகத்துக்கு நற்கதியுண்டென்றும், தன் ஆஹாரத்திற்கென்றே கொல்வது கூடாதென்றும், கொள்கைகளைக்கொண்ட இந்துக்களின் செய்கைகளைக் கண்டிக்கும் பௌத்தர்கள் தங்கள் சரீர போஷணைக்காகவே மிருகங்களைக் கொல்வதென்பது எம்மாதிரிச் செயல் என்பதை அவர்கள் யோசிக்கார்கள் இல்லை. ஆகவே சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு மாறுபாடுகள் இவர்களின் விஷயங்களில் காணப்படுகின்றன என்பதை யோசித்துப்பார்த்தல் மிகவும் அவசியம்.

இவர்கள் ஆஸ்திகர்கள் இல்லை என்று இவர்களுடைய கொள்கைகளிலிருந்தே தெரிகிறது. நாஸ்திகர்கள் என்பது விவாதமற்ற விஷயம் தான். நாஸ்திகர்களுக்குள் பேதமிருக்கலாம். இயற்கையினால் ஒருவனுக்கும் மற்றவனுக்கும் குண நிரூபணத்தில் பேதம் ஏற்பட்டிருக்கிறது. அதையநுஸரித்தேதான் நாஸ்திகர்களுக்குள் காணப்படும் அபிப்ராயபேதங்களும்.

பகவத்ஸ்ருஷ்டியில் யுகபேதத்தைப்போல் குணபேதங்களும், ஸ்வரூபபேதங்களுங்காணப்படுகின்றன. ஆயினும் ஒவ்வொரு யுகத்திலும் ஸாத்வீக ப்ரக்ருதிகளுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடும் ராஜஸ, தாமஸ ப்ரக்ருதிகளும் கூடவே காணப்படுகின்றனர். அவர்களால் ஆகிய உபத்ரவங்களைச் செய்யாமல் இருப்பதும் இல்லை. யுகந்தோறும் தர்மங்குறைவதும், பிறகு தர்மத்தை நிலைநிறுத்த பகவான் அவதரிப்பதும் நமக்கு உபதேசிக்கப்பட்டவை. வேதத்திலிருந்தும், இதிஹாஸ புராணங்களிலிருந்தும் நாம் அறிந்துகொள்ளும் உண்மைகள். ஆகவே ஸமீபகாலத்தில் நமது ஸமூஹத்தில் காணப்படும் தீய சூழ்நிலையும் நமக்குப் புதிதல்ல. ஆயினும் நாம் வாளாயிருக்கமுடியாது. தர்மத்திற்காக நாம் பாடுபடவேண்டியதும் அவசியந்தானே.

நமது அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம். பத்தாண்டுகளுக்கு முன் அந்நிய ஆட்சியிலிருந்து பிரிந்தவுடன் ஒரு புதிய அரசியலை நாம் ஏற்படுத்திக்கொண்டோம். இதை உருவாக்குங்காலத்தில் (பகவதநுக்ரஹத்தால்) மதக் கொள்கைகளுக்கு ஓரளவு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் காற்கவே பல உறிமைகள் நமக்கு ஜீவாதார உறிமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவைகளை அமுல் நடத்துவதில் குறைபாடுகள் வளருமோ என பயப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவருகிறது. ஸமூஹநலசீர்திருத்தங்கள் என்றும், தாழ்த்தப்பட்டோருக்கான சலுகைகள் என்றும் புது விதமான கொள்கைகளின் மூலம் ஜீவாதார உறிமைப்படி நமக்குக்கிடைத்த நலன்கள் மறுக்கப்பட்டு வருகின்றன. ஒரு கையால் கொடுத்ததை மறு கையால் திரும்பப் பெற்றுக்கொள்வது போல் தோன்றுகிறது.

இவைகளுக்குக் காரணங்கள் நமது ஸுஹ்ருத்துக்கள் போல் வாழ்பவர்களே தான்.

நமது நாட்டுச் சின்னம் அசோகனுடைய தர்மசக்ரம் நமது ஸஹிப்புத் தன்மையினால் தர்மசக்ரந்தானே என ஸந்தோஷித்தோம். இம்மாதிரி தர்மசக்ரம் அசோகனால் நூதனமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டதில்லை. பரமாத்மாவின் வலக் கரத்தில் உள்ள ஸுதர்சனந்தானே என இம்மாதிரியெல்லாம் நமது ஸமாதானங்கள் நமக்கு சாந்தியளித்தன. ஆனால் நாளடைவில் நாம் காண்பது பகற்கனவு எனத் தெரியவருகிறது. மதச்சார்பற்ற அரசாங்கம் பௌத்தனுடைய இரண்டாயிரமாவது ஆண்டு விழாவுக்கு ஏராளமான செலவு செய்தது.

ஆனால் சங்கர, ராமானுஜ, மத்வ ஜயந்திகளுக்கோ, வ்யாஸ, வால்மீகி ஜயந்திகளுக்கோ, ஏன்? பரமாத்மாவாகிய ராமபிரானின் ஜந்மோத்ஸவமாகிய ஸ்ரீராமஜனனோத்ஸவத்திற்கோ, அஜ்ஞானத்தைப் போக்கடித்து பக்தனுக்கு அபயம் அளித்து உலகை ரக்ஷித்த ந்ருஸிம்ஹஜயந்திக்கோ ஸாமாந்யமான விரா

மம் கூட அளிப்பதில்லை. பக்தர்களாகிய நாம் பஜிப்பதற்கும் அவகாசம் கூட கொடுப்பதில்லை. இது எந்த நியாயத்தைச் சேர்ந்தது.

அதுமட்டுமல்ல. புத்தஜயந்தி கொண்டாட்டத்திற்கு நமது தலைவர்— உலகம் போற்றும் தலைவர்— நாடு விட்டு நாடு சென்று கோலாகலத்தில் கலந்து கொள்கிறார். புத்தஜயந்தி தினத்தில் ஏராளமான புகழ்மாலைகளைச் சூட்டினார். நமது மதத்தில் காணப்படாத தத்துவங்களை இங்கு எப்படிக் காணமுடிந்ததோ தெரியவில்லை.

இதேபோல் மற்றொரு அதிசயம் நமக்கு அருகாமையிலேயே இருக்கிறது. 'நானும் ஒரு புத்தனே' எனக் கூறிக் கொண்டே ஒரு பெரியார் நமது ஸமூஹத்தையழிப்பதே தனது நோக்கு என்று உறக்கக் கூறிக்கொண்டு ஒரு கூட்டத்தைக் கூட்டிவருவதும் அதனால் நமக்கு அடிக்கடி கஷ்டநஷ்டங்கள் ஏற்படுவதும் அவைகளைக் கண்டிக்க முடியாத ஒரு நிலையும் மிகவும் ஆச்சர்யமாக இல்லையா? புத்தனுடைய கொள்கைகளை எவ்வளவு அழகாக இவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய செயல்களை இவர்களுடைய அறிவுத்திறனையும் அதற்கநுகுணமான போக்கையும் நிரூபிக்கின்றன அல்லவா?

கிருஸ்துவமதத்திலும், முகமதிய மதத்திலும் வேற்றுமை கிடையாது. இந்து ஸமூஹத்தில்தான் ஜாதி வேற்றுமைகள் காணப்படுகின்றன. இங்குள்ள தாழ்த்தப்பட்டோர்களை உயர்த்தவே பலவித சலுகைகள் அவசியம் என்று அரசாங்கம் கூறி வந்தது. கல்வி ஸ்தாபனங்களிலும், உத்யோக நியமனங்களிலும் அவர்களுக்கு சலுகைகள் கொடுத்து வந்தது. ஆனால் ஸமீபகாலத்தில் இம்மாதிரியான தாழ்த்தப்பட்டோர்கள் கிருஸ்துவமதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆனாலும், இவர்களுக்கும் இம்மாதிரி சலுகைகள் உண்டு என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இது ஒருவித கொள்கையையநுஸரித்துத்தானே நடந்திருக்கிறது. அதாவது ஸமூஹத்தில் பொருளாதாரத்துறையில் தாழ்ந்தவர்களாகிய இவர்களுக்கும் சலுகைகள் கொடுக்கவேண்டும், அதுவும் ஜாதிமத அடிப்படையில் அல்ல என்பதுதான். இக்கொள்கையையநுஸரித்து இதேபோல் பொருளாதாரத்துறையில் இவர்களைக் காட்டிலும் தாழ்ந்த நிலையில் பிராஹ்மணர்கள் இருக்கவில்லையா? அவர்களுக்கு மட்டில் என் இம்மாதிரி சலுகைகள் கொடுக்கப்படவில்லை? இவர்கள் விஷயத்தில் மட்டில் ஏன் கண்ணாடி போட்ட கண்களால் பார்க்கவேண்டி வருகிறது?

இது மட்டில் அல்ல. கோர்ட்டு வ்யவஹாரங்களை நடத்த சக்தியற்ற இம்மாதிரியான தாழ்த்தப்பட்டோருக்கு அரசாங்கம் பணம் கொடுத்து வ்யவஹாரங்களை நடத்துமாம். இதைக் காட்டிலும் ஒரு ஏற்பாடு செய்யலாம். தாழ்த்தப்பட்டோர் எனக் கூறப்படுபவர் வாதியானாலும் சரி, பிரதிவாதியானாலும் சரி அவருடைய கக்ஷியே ஜயித்ததாகக் கருதவேண்டும் என்று ஒரு நியமத்தை ஏற்படுத்திவிட்டால் ஏராளமான பொருட்செலவையாவது தடுக்கலாம்.

இவ்விடத்தில் நமக்கு ஒரு விஷயம் ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. இங்கிலாந்தில் முற்காலத்தில் மதப்ரவர்த்தகர்களுக்கும், பொதுமக்களுக்கும் சச்சரவு ஏற்படுமாயின் இம்மாதிரி வ்யவஹாரத்தை மதஸம்பந்தப்பட்ட நீதிபதிகளையுடைய தனிப்பட்ட நீதிஸ்தலங்களில்தான் விசாரித்தல் வேண்டும். அங்குமதஸம்பந்தப்பட்டவர்களுக்கு ஸாதகமாக தீர்ப்புக்களும் வழங்கப்படும். அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளும் மற்றவர்களை உத்தேசித்து குறைவாகவே இருக்கும். இந்நிலையை எதிர்த்துப் போராடிய ஒரு அரசனே கொல்லப்பட்டான். பிறகு நாளடைவில் இந்நிலை மாறவாரம்பித்தது.

இது ஸமயம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது ஒரு விஷயந்தான். 'தாழ்த்தப்பட்டவன் யார்' என்பதுதான். சரீரஸம்பந்தமான கட்டுப்பாடுகள் இல்லாமலும் ஆஹாரநியமம் என்பதே இல்லாமலும் மூட்டை தூக்கியோ, ரிக்ஷா இழுத்தோ, தரகுகாரனாக இருந்தோ

தினமும் ரூபாய் ஐந்து பத்து என்று ஸம்பாதிக்கிறவன் தாழ்த்தப்பட்டவன் என்று கூறுவோமானால் பிரதிதினமும் ஓடியாடி சரீர ஸௌக்யமென்பதே இல்லாமல் ஆஹாரவசதி அடியோடு கிடைக்காமல் பிற்பகலில் மட்டில் ஏதாவது சிறிதளவு உட்கொள்ளும் பிராமண ஏழைகள் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகமாட்டார்களா? காலையில் அவஸர அவஸரமாக சிறிதளவு போஜனம் உட்கொண்டு வேலைக்கென்று ஓடி மனோவியாகூலத்துடனும், சரீரதளர்ச்சியுடனும் பிரயாசைப்பட்டு வரும் குமாஸ்தாக்களோ, ஆசிரியர்களோ தாழ்ந்தப்பட்டவர்கள் ஆகமாட்டார்களா? சாஸ்த்ரம் என்று கூறிக்கொண்டுமழை,குளிர்,வெய்யில் பாராமல் குளித்து சுத்தமாகக் காணப்படுகிறார்கள் என்றால் இது ஒரு குறையா? ஸமூஹத்திற்கு நல்லதுதானே. இவர்களைப்போல் இரண்டு மூன்று மடங்கு ஸம்பாதிக்கும் முன் கூறிய வகுப்பினர் அசிரத்தையினாலும் பழக்கத்தினாலும் அருவருக்கத்தக்க முறையில் காணப்படுகிறார்கள் என்றால் அவர்களைப் போற்றுவதற்கு அது ஒரு காரணமாகுமா? அவர்களுக்கு நற்புத்தி புகட்டுவது நமது கடமையாகும். அதற்காக இதரர்களையும் வஞ்சித்து இவர்களுக்கே ஸகலவித சலுகைகளையும் கொடுக்கவேண்டும் என்பது உயர்ந்த கொள்கைதானா? இது ஸமயம் உயர்த்தப்பட்டோர் எனக் கூறப்படுபவர்களை பலவிதத்திலும் துன்பத்திற்கு ஆளாக்கி முடிவில் உண்மையாகவே தாழ்த்தப்பட்டோர்களாக்குவதில் என்ன விதமான லாபத்தைக் காணமுடியும்?

மதஸம்பந்தமான கொள்கைகளும் அத்துடன் ஸம்பந்தப்பட்ட ஆசார அநுஷ்டானங்களும் நமது ஸமூஹத்தில் பலவித வகுப்பினருக்கும் நன்மையும் மனோ அமைதியையும் ஸந்துஷ்டியையும் கொடுத்து வந்தன. இவைகளை எல்லாம் புறக்கணித்து விட்டதால்தான் பற்பலவித அனர்த்தங்கள் ஏற்பட்டன. இவ்வுண்மைகளை அறியமுடியாதவர்கள் வீண் போட்டிகளை உண்டாக்கி மனக்கசப்பையும் ஸௌஜன்யக் குறைவையும் ஏற்படுத்திவருகிறார்கள். அரசாங்கமாவது இவ்வுண்மைகளை உணர்ந்து ஸமூஹத்தில் ஸௌஜன்யக் குறைவு ஏற்படாவண்ணம் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஸமூஹத்தில் வீண் கிளர்ச்சிகளும், எதிர்க் கிளர்ச்சிகளும் ஏற்பட்டு அமைதி குலையும் என்பது நிச்சயம்.

ராமராஜ்யஸ்தாபனமும், சோஷலிஸ ஸமுதாயஸ்தாபனமும் வீண்கனவுகளாக முடியும். ஏராளமான விதத்தில் வரி விதித்தலிலும், அதனால் கிடைத்த வருவாய் வீண் வழிகளில் செலவு செய்தலிலும்தான் முடியும். வரிபளுவென்ற கஷ்டத்துடன் சூழ்நிலை காரணமான கஷ்டநஷ்டங்களும் சேர்ந்து ஸமூஹத்திற்கு இன்பமின்மையையே அதிகரிக்கும். ஸ்ரீந்ருஸிம்ஹன்தான் பக்தஜன துக்கங்களைப் போக்கடிக்கவேண்டும்.

ஸ்ரீ:

பகவதாராதனம்

இந்த ஜகத்தை ஸ்ருஷ்டி செய்து ரக்ஷிக்கின்றவன் பகவான். ஸம்ஹாரம் செய்பவனுமவனே. அவனிடமுள்ள பயத்தினால் காற்று ஸூர்யன், சந்திரன் முதலியவர்கள் தங்கள் கார்யங்களைச் செய்துவருகிறார்கள். அவனுடைய ஸங்கல்பத்தால் கடல் கரை புறண்டு வழிந்து நாடு நகரங்களை நாசமாக்காமல் இருக்கின்றது. அதனாலேயே மழை பெய்கிறது. விதைகள் முளைக்கின்றன. பகவான் ஒருவன் இருக்கின்றான் என்பதை ஒப்புக்கொள்ள மனமில்லாத நாஸ்திகர்கள் இயற்கையின் சக்தியினால் இவ்விதம் உண்டாகின்றது என்று சொல்லுகிறார்கள். ஆகிலும் பகவானையே இயற்கை என்று அழைக்கின்றார்கள். 'தெந விநா தூணமவி நவலதி'. அவனில்லாது அணுவும் அசையாது. இவ்விதம் ஸர்வசக்தனான பகவானால் ஸ்ருஷ்டி செய்யப்பட்ட இந்த கர்ம பூமியில்நம்மைமரம் செடி, கொடி, புல், பூண்டு, ஈ, எறும்பு, நாய், நரி, மாடு, ஆடு முதலிய ஜந்துக்களின் ஸஜாதீயராகப் பிறக்க வைக்காமல் மனுஷ்யனாகப் பிறக்க வைத்தான். அது அவனுடைய தயாகார்யமே.

மனிதர்களுக்கும், மற்றவைகளுக்கும் உள்ள வாசி நல்ல அறிவினால் உண்டாகிறது. நாமும் நமது காலத்தை வீணாக்காமல் உயர்ந்த படிப்புகளைப் படித்து பட்டங்களையும் பெற்று பெரிய பதவிகளையும் வஹித்து வருகின்றோம். 'ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்' என்கிறபடி க்ஷணகாலமும் வீணாகாமல் ஏதாவது வேலைகள் செய்து வருகின்றோம். 'உதரநிமித்தம் பஹுக்ருதவேஷ:' என்கிறபடி வயிறு வளர்ப்பதற்காக அநேக வேஷங்கள் போட்டு வருகிறோம். இது இக்காலத்தில் மிக மிகப் பொருத்தமானது. பெரியோர்கள் யாராவது 'என் துராசாரமுள்ளவனாக இருக்கின்றாய்?' என்று கேட்டால் உத்யோகத்தை உத்தேசித்து இப்படி இருக்கவேண்டியிருக்கிறது என்று விடையளிக்கின்றோம். இப்படி ஓயாமல் பாடுபட்டு ஸம்பாதித்தாலும் பண்டிதன், பாமரன், பணக்காரன், ஏழை, மேல்ஜாதி, கீழ் ஜாதி என்கிற வாசியில்லாமல் எல்லோரும் ஒவ்வொரு குறைவுடன் இருந்துகொண்டு கஷ்டத்தையநுபவிக்கின்றோம். கஷ்டப்படாதவர் ஒருவருமில்லை. இங்குமட்டில் கஷ்டத்தையநுபவிக்கின்றோமென்பதில்லை. பரலோகத்திலும் கர்மாநுகுணமாக கஷ்டத்தையநுபவிப்போம். அநுபவித்துமிருக்கிறோம். தினந்தோறும்ப்ராதர்நிர்வேதகாரிகையில்பரலோகத்தில் பட்ட கஷ்டங்களையனுஸந்தித்து 'சுதீதாவபி ஸம்ப்ரதி வேபதே ந: ...' [இங்கிருந்து யமலோகம் போகும் போது நான் பட்ட கஷ்டங்களை நினைத்தால் பயமாகயிருக்கின்றது. ஜந்மாந்தரத்தில் நடந்தது இன்று என் எதிரில் நடப்பதைப்போல் தென்படுகிறது] என்றுஅனுஸந்திக்கின்றோம். ஆதலால் இத்துன்பம் நீங்க உடனே 'சுஹ்ருத்து ஹரிம் ப்ராத: ஸர்வாஹ்வயாணிவாசயாநு | சவ்யம்ஸ்து தமேதா ஶுவாநு தமேதா ஸேஹூநு ஜவணுவி ||' என்று ப்ரதிஜ்ஞை செய்து கொள்ளுகின்றோம். அதாவது காலையில் பகவானை வணங்கிவிட்டு பகவதாராதநத்திற்கு வேண்டிய த்ரவ்யங்களை ஸம்பாதித்திக்கொண்டு அதனால் பகவானுக்குத் திருவாராதனம் செய்து அஷ்டாக்ஷராதி ஜபங்களைப் பண்ணுகிறேன் என்று.

மேலும் நமக்கு கண், காது முதலிய இந்த்ரியங்களை நன்றாக உபயோகமுள்ளவைகளாக ஸ்ருஷ்டி செய்திருக்கின்றானே அதற்காக அவனுக்கு நாம் என்னசெய்கின்றோம்? இவ்விந்த்ரியங்களில் உண்டாகும் ரோகங்களை நிவ்ருத்தி செய்துவைக்கும் சிகித்ஸகனிடம் (டாக்டரிடம்) நாம் காண்பிக்கும் மரியாதை தான் என்னே! பக்திதான் என்ன!! இவர்களால் இம்மாதிரியான இந்த்ரியங்களைத்தான் ஸ்ருஷ்டிக்க முடியுமா? சாவைத் தடுக்கத்தான் முடி

யுமா? குழந்தைகளில்லாதவருக்கு ஸந்ததி யுண்டுபண்ணத்தான் சக்தியுண்டா? இவைகள் எல்லாம் செய்ய ஸாமர்த்யமுள்ள பகவானிடம் எப்பொழுதும் நன்றியை செலுத்தவேண்டும். அவனை க்ஷண காலமும் மறக்கக் கூடாது. அவனுக்கு நாம் ஸ்வத: அடிமைகள் என்கிற எண்ணம் எப்போதும் இருக்கவேண்டும்.

'ஶாவஸஹிதம் யதா தாநம் கேஹ்யதே வா ஶாதந: | தஸ்யைவ மாத்ரும் க்ஷிவீத ஶ்வ வக்ஷுராஜீ ஶாம்ஹிதம் ||' என்கிறபடி பகவானுக்கு அடிமை என்று எண்ணினால் அவனுடைய சிஹ்நங்களான சங்க சக்ரங்களை நாம் தரிக்க வேண்டும். அதாவது ஸமாச்ரயணம் பண்ணிக்கொள்ள வேண்டும். 'உபநயநவிவாஹாவுத்வேகவ்யாபாரா:' என்கிறபடி இக்காலத்தில் உபநயனம், விவாஹம் முதலிய ஸம்ஸ்காரங்கள் எதற்கா ஏற்பட்டது என்பத றியாமல் (மந்திரத்தைச் சொல்பவர் உபாத்யாயர். யஜ்ஞோபவீதத்தையும் திருமங்கல்யத்தையும் கட்டுபவர்கள் கல்யாணப் பிள்ளைகள்) கோலாஹலமாகப் பணச்சிலவு மட்டும் ஆகிறுப் போல்பஞ்சஸம்ஸ்காரமும் நமக்காய் விட்டது. உபநயனம் செய்யப்பட்டதும்(ஸ்வரம்முதலியவைகள் ஸரியில்லாவிட்டாலும் 4 தினங்களாவது ஸந்த்யாவந்தனத்தைப் பண்ணுகின்றோம், ஆனால் பஞ்சஸம்ஸ்காரம் ஆனதும் அதில் ஒன்றான மந்த்ரோபதேசத்தைப் பெற்றும் மறு தினம் கூட ஜபம் பண்ணுவதில்லை. பஞ்சஸம்ஸ்காரம் என்றால் ஐந்து ஸம்ஸ்காரங்கள் என்று பொருள். அவையாவன:-(1) பகவானுடைய சங்க சக்ராதிகளை தரித்துக்கொள்ளுதல், (2) ஊர்த்வபுண்ட்ரதாரணம், (3) தாஸ்யநாமத்தை வஹித்தல், (4) மந்த்ரோபதேசம் பெறுதல், (5) திருவாராதனக்ரமத்தின் உபதேசத்தைப் பெறுதல். மந்த்ரங்களை ஜபிப்பதற்குப் போதில்லையாகில் திருவாராதனம் செய்யப் போதேது? அதைப்பற்றிய சிந்தைதான் ஏது? ஆகையால் நாம் செய்துகொள்ளும் பஞ்சஸம்ஸ்காரமும் மற்ற ஸம்ஸ்காரங்களைப் போல் கட்டுப்பாட்டிற்காக செய்துகொள்ளுகின்றோமேயன்றி அனுஷ்டானத்திற்காக இல்லாமற்போய்விட்டது. அப்படியாகில் முன்பு கூறியபடி பயந்தான் வ்ருத்தியாகும். இஹபரலோகங்களில் கஷ்டத்தைத்தான் அநுபவிக்க நேரிடும். அதைப் போக்க பகவானை ஆராதிக்கவேண்டும். 'யே யஜந்தி ஸதா விஷ்ணும் நிஷ்காமா ஜ்ஞாநதத்பரா: | ந தே ஸம்ஸ்ருதௌ பூயோ விஜாயந்தே' என்கிறவசனப்படி ஸதா பகவானை ஆராதித்து வருபவர்கள் மறுபிறப்பை யடைகிறதில்லை என்று ஏற்படுகிறது. 'ந விஷ்ணுவாராதநாத் புண்யம் வித்யதே கர்ம வைதிகம்' என்கிறபடி விஷ்ணுவின் ஆராதனத்தைக் காட்டில் புண்யமும் வைதிகமுமான கர்ம வேறு கிடையாது என்று பகவதாராதனத்தை மிகவும் உயர்ந்ததாக ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

பகவதாராதனம் பண்ணுவிட்டால் 'யோ நார்ச்சயதி வை விஷ்ணும் ஸ யாதி நரகம் த்ருவம்' என்கிறபடி நரகம்தான் வரும் என்றும், 'யோ மோஹாதத வாஜ்ஞாநாத் அக்ருத்வா விஷ்ணுபூஜநம் | புங்க்தே ஸ யாதி நரகம் ஸூகரேஷ்வபி ஜாயதே || [அறியாமையாலோ மோஹத்தாலோ திருவாராதனம் பண்ணுமல் சாப்பிடுபவன் நரகத்தையடைகிறான் அதனின்றும் விடுபட்டு பன்றியாய்ப் பிறப்பான்] என்றும், 'விஷ்ணுபூஜாரஹிதே க்ராமே விஷ்ணுபூஜாரஹிதே க்ருஹே | ந க்ஷணம் நிவஸேத் நாபி ந தத்ர ஜலபாநம் வஸேத் ||' என்கிறபடி விஷ்ணுபூஜை இல்லாத ஊரிலோ, வீட்டிலோ தீர்த்தபானம் கூட பண்ணக் கூடாது; க்ஷண காலம் வஸிக்கவும் கூடாது, என்றும், 'விஷ்ணுபூஜாவிஹீநஸ்ய தத்தம் இஷ்டம் ஹுதம் ஶ்ருதம் | தபஸ்ஸ்வாத்யாயம் யாதி வ்யர்த்ததாம் ஶவாலங்காரவத் ||' என்கிறபடி விஷ்ணுபூஜை செய்யாதவனுக்குச் செய்யும் தானம், அவன் செய்யும் ஹோமம், தபஸ், அத்யயனம், எல்லாம் சவாலங்காரம் போல் பயனற்றது, என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. 'பகவானு

டைய விக்ரஹம் இல்லாத வீடு 'க்ருஹம் ஸ்மசா
நம் தவ பிம்பவர்ஜிதம்' என்கிறபடி மயா
னத்திற்குத் துல்யம் என்று நிந்திக்கப்படுகி
றது. ஆக பகவதாராதனம் பண்ணுவதால்
புண்யம் உண்டாகிறதென்றும், ஆராதனம்
பண்ணுவிட்டால் நரகம் உண்டாகிறதென்றும்
தெளிவாகிறது.

இனி பகவானுடைய விக்ரஹம் எப்படி இருக்கவேண்டும் என்றும், ஸாளக்ராம ஆராதனத்தை நாம் என் செய்யவேண்டும்? என்றும், அதன் உத்பத்தியும், லக்ஷணமும், ப்ரபாவமும் விஜ்ஞாபித்துக் கொள்ளப்படுகிறது.

வீடுகளில் மண்ணினால் பண்ணப்பட்டதும், மரத்தினால் செய்யப்பட்டதுமான விக்ரஹங்களை வைத்துப் பூஜை செய்யக் கூடாது. தங்கம், வெள்ளி முதலியவைகளால் மிகவும் அழகியதாய் விக்ரஹங்களைப் பண்ணி ஆராதிக்க வேண்டும். அவ்விக்ரஹங்களும் ஆசார்யன் அனுக்ரஹத்தாலோ, பாரம்பர்யக்ரமமாகவோ நம்முடைய விருப்பத்தாலோ, தானமாய்க் கிடைத்ததாகவோ, யாசித்ததால் கிடைத்ததாகவோ இருத்தல் வேண்டும். விக்ரஹங்களை வைத்து ஆராதிக்கும்போது அதில் லோஹ புத்தி பண்ணக்கூடாது. விக்ரஹங்களில் லோஹபுத்தியுள்ளவனும், ஆசார்யனை நம்மைப் போன்ற மனுஷ்யன்தான் என்று எண்ணுகிறவனும் நரகத்தையடைகிறான் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. விக்ரஹ ஆராதனம் பண்ணுவது மிக ச்ரமம். தினந்தோறும் ஆவாஹநாதிகள் பண்ணவேண்டும். ஒரு தினம்கூட ஆராதனம் நிற்கக்கூடாது. ப்ரமாதத்தாலோ, ஆலஸ்யத்தாலோ கொஞ்சம் தவறுதல்கள் நேரிட்டாலும் தவறுதலுக்கனுகுணமான ஸம்ப்ரோக்ஷணாதிகள் பண்ணவேண்டும். ஆகையாலேயே அநவதான ஆலஸ்யாதிகள் நிறைந்த நம்போன்றவர்கள் ஸாளக்ராம ஆராதனம் பண்ணிவருகிறார்கள். உத்தமமான ஆசாரமுள்ள பரமைகாந்திகள் இன்றும் தங்கள் திருமாளிகைகளில் விக்ரஹாராதனம் பண்ணிவருவதைக் காண்கிறோம்.

'ஸாளக்ராமசிலாயாஸ்து ந வ ஸம்ப்ரோக்ஷணம் ஸ்ம்ருதம் । ந ப்ரதிஷ்டா வியாதவ்யா நவைவாவாஹநாதிகம்' என்கிற வசனப்படி ஸாளக்ராமசிலைக்கு ஆவாஹநம், ஸம்ப்ரோக்ஷணம், ப்ரதிஷ்டை முதலியன கிடையாது. உடைசல், விரிசல் உள்ளதாயிருந்தாலும் சக்ரம் மாத்திரம் இருந்தால் போதும். ஸாளக்ராமத்தைப் பூஜித்தால் ஐஹிகபலத்தையும் ஆமுஷ்மிகபலத்தையும் கொடுக்கும். அநாசாரமாக இருக்கும்போது பெருமாளை (ஸாளக்ராமத்தை) தொடும்படி நேர்ந்தால் 'ஸ்நாநம் ஸஹஸ்ரநாமம் பஞ்சகவ்யஞ்ச சுத்திதாயகம்' என்கிறபடி மறு நாள் பாலால் திருமஞ்சனம் பண்ணினால் போதும். இவ்விதம் ஸாளக்ராம ஆராதனம் பண்ணுவதில் பல ஸௌகர்யம் உண்டு,

ஸாலம் என்னும் மரங்கள் நிறைந்துள்ள மலைக்கு ஸாளக்ராமம் என்று பெயர். அம்மலையில் உண்டானதும், அச்சிலையில் வஜ்ரகீட புழுவால் த்வாரம் பண்ணப்பட்டதும் சக்ரம் முதலிய ரேகைகள் உள்ளதும், கண்டகிநதியில் அகப்படக்கூடியதுமான ஓர் சிலா விசேஷம். இதுவும் பகவானுடைய அர்ச்சாவிக்ரஹங்களில் ஒன்று. இதில் பகவான் எப்பொழுதும் ஸந்நிஹிதனாக இருக்கிறான். இதன் மஹிமைக்கு எல்லை கிடையாது. ஸாளக்ராமத்தில் 14 லோகங்களும் ஸகல தேவர்களும் வஸிக்கின்றார்கள். ஸாளக்ராமபூஜை செய்யுமிடத்திற்கு ஒரு யோஜனை தூரம் வரையில் கோடி புண்ய தீர்த்தங்கள் இருக்கின்றன. ஸாளக்ராமத்தைப் பார்த்தாலும், தொட்டாலும் அதற்கு அபிஷேகம் பண்ணின தீர்த்தத்தை ஸாப்பிட்டாலும் காயிக, மானஸ, வாசிக பாபங்கள் யாவும் சிங்கத்தைக் கண்ட ம்ருகங்கள் போல் பறந்தோடிவிடுகின்றன. ஸாளக்ராமத்தை ரக்ஷித்து வருபவன் ஸர்வஸ்வதானம், யாகம், பூப்ரதக்ஷிணம் முதலியவைகளால் உண்டாகும் ஸர்வ பலன்களையும் அடைவான் என்றிவ்வாறு இன்னும் பல விசேஷங்கள் உள்ளதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது

ஸாளக்ராமலக்ஷணம் என்னும் க்ரந்தத்தில் இதற்குப் பல லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன. அத்ருஷ்டமுள்ளவர்களுக்குத்தான் நல்ல மூர்த்

திகளாகக் கிடைக்கும். இவைகளை வாங்கும் போது அதன் லக்ஷணங்கள் தெரிந்த பெரியோர்களைக் கொண்டு வாங்கவேண்டும். நல்ல மூர்த்திகள் வம்சாபிவ்ருத்தி, ஜ்ஞாநாபிவ்ருத்தி, ஐச்வர்யாபிவ்ருத்தி முதலியவைகளை உண்டு பண்ணும். மாறுபட்டதானல் மாறுபட்ட பலன்களையே கொடுக்கும். இதனாலேயே அச்சிலைகளின் மஹிமையை ஸுலபமாக அறியலாம். ஸாளக்ராமத்தை விலைக்கு வாங்கக் கூடாது. அப்படி வாங்கினேனயாகில் கொடுப்பவன், வாங்குபவன், விலை மதிப்புப் போடும் மத்யஸ்தன் எல்லோரும் நரகத்தை யடைகிறார்கள். ஆகையால் அவைகளுக்கு விலையாகக் கொடுக்காமல் பாரிதோஷிகம்போல் ஆடையாபரணம் முதலியவைகளாகக் கொடுக்கவேண்டும்.

கறுப்பாயும் மழமழப்பாயும், அதிக பெருமனாகவோ, சிறியதாகவோ இல்லாமல் நடுத்தரமாயுள்ளதும் சிறிய வதனமுள்ளதுமான மூர்த்திகள் உத்தமமானவைகள். கருப்பில்லாதது மத்யமம். மிச்ரமான (கலந்த) வர்ணமுள்ளது நல்லது பொல்லாதது இரண்டையும் கொடுக்கும். வெளுப்பு அர்த்தத்தையழிக்கும். பாப புத்தியைக் கொடுக்கும். பொன்னிறம் புத்ர ஸம்பத்தையளிக்கும். இவ்விதம் இன்னும் பல லக்ஷணங்கள் இருக்கின்றன. அரணிக் கட்டையிலுள்ள அக்நிபானது கடையும்போது ப்ரகாசிப்பது போல் எங்குமுள்ளனை எம்பெருமான் ஸாளக்ராமத்தில் நித்யமாக ப்ரகாசிக்கிறான், ஸாளக்ராமத்துடன் த்வாரகாசிலையைச் சேர்த்து பூஜிக்கவேண்டும். த்வாரகா சக்ரமானது வெளுப்பாயும் அனேக சக்ரமுள்ளதாயுமிருக்கும். இரண்டும் சேர்த்துத் திருவாராதனம் பண்ணினால் அதன் புண்யத்தை அளவிடற்பாலது. ஸாளக்ராம மூர்த்திகள் இரட்டைப்பட்டதாக இருக்கவேண்டும். ஆனால் இரண்டு கூடாது. ஒற்றைப் படையிலும் மூன்று கூடாது. அதில் ஒன்றே நல்லது. 12 மூர்த்திகளை வைத்துக்கொண்டு ஆராதிப்பவன் வைகுண்டலோகத்தில் கொண்டாடப்படுவான். ஸ்த்ரீ, சூத்ரர்கள் ஸாளக்ராமத்தைத் தொடக்கூடாது. அவர்கள் ஸ்பர்சம் வஜ்ராஸ்பர்சம் போன்றது. அவர்களால் செய்யப்படும் சந்தனப் பூச்சு விஷப் பூச்சாகும். அவர்களால் ஸமர்ப்பிக்கப்படும் நைவேத்யமும் காலகூடவிஷத்திற்கு ஒப்பானது. பக்தியிருந்தால் தூரத்திலிருந்தே செய்யவேண்டும். ஸாளக்ராமத்தை தூஷிப்பவன் நரகத்தையடைவான். நல்ல பகவத் பக்தனுய் தினந்தோறும் திருவாராதனம் பண்ணுபவனுக்கு ஸாளக்ராமதானம் செய்தால் ஸர்வஸ்வதானம் செய்த பலனுண்டு.

(தொடரும்)

(141வது பக்கத்தின் தொடர்ச்சி)

தில் எனக்கும் அவர்களுக்கும் வாசி இல்லையே என்று திருவுள்ளர்.

ஸ்ரீராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ஸாதித்தபடி ஸ்வாமி தேசிகன் ஸூக்திகள் பெரும்பாலும் அவருக்கு முன் சென்ற கவிகளின் கூற்றுகளைக் குறிக்கொண்டு ஜ்ஞாபகப்படுத்தும்படியும் அவைகளிலிருக்கும் தோஷங்களை களைந்து அழகுபட பரிஷ்கரித்து அருளிச்செய்தபடியுமாகவே அமைந்திருப்பன என்பது ஸ்வாமி தேசிகனின் கவித்திரளில் ரொம்பவும் ரஸமான விஷயம். இருந்தாலும் இந்த இடத்தில் (आनन्दानन्त्यमाह என்கிற ச்லோகத்தில்) ஸ்வாமி பூர்வாசார்யாளின் அடிச்சுவடிகளையொட்டி இவர் திருவாக்கின் பெருமையால் அவர்கள் ஸூக்திக்கு மெருகிட்டாப்போல் செய்துவிட்டார். அந்த இடத்தில் ஷாட்குண்யபரிபூர்ணரான அர்ச்சாவதாரத்தில் ஸ்ரீரங்கபாதுகையின் பெருமையை அனுபவித்தார்.

இந்த இடத்தில் ஸத்யஜ்ஞானதிகுணவிசிஷ்டனுகிய ஜகத்காரணத்வ ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்திலீடுபடுகிறார். அந்த இடத்தில் அபரோக்ஷமான ஸ்ரீரங்கநாதனின் மரவடிகள் ஸ்வாமியின் ஸூக்திக்கு விஷயமானவை. இந்த இடத்தில் பரோக்ஷமானதும் यतो वा इमानि भूतानि जायन्ते என்று ஜகத்காரணமாக சொல்லி அப்படிப்பட்ட ப்ரஹ்மசப்தவாச்யன் என்கிற ஆகாங்க்ஷைக்கு सहस्रशीर्षं देवं विश्वाक्षं विश्वशम्भुवम् । विश्वं नारायणं देवं अक्षरं परमं प्रभुम् ॥' என்ற ச்ருதிபலத்தால் நிர்த்தாரணம் செய்யப்பட்டவரும் 'श्रीमान्नारायणो नः पतिरखिलतनुः मुक्तिदो मुक्तभोग्यः' என்று ஸ்வாமியே ஸாதித்த ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

ஸ்ரீ:

பகவத்குணாநுபவம்

சென்ற பங்குனிமீ ஸஞ்சிகையில் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் **‘अम्बुन्यम्बुनिधेरनन्यगतिभिः मीनैः कियद्गम्यते’** என்ற பாதுகாஸஹஸ்ர ச்லோகத்தை மிகவும் ரஸமான முறையில் எடுத்து உபபாதித்திருக்கும் லேகத்தை வாசிக்குங்கால் ஸ்ரீதேசிகன் அதே மாதிரி குணாநுபவங்களில் ஈடுபட்டிருக்கும் இதர ச்லோகமும், லேகத்தின் ஒவ்வொரு பங்க்தியும் ஸேவிக்குங்கால் ஜ்ஞாபகத்திற்கு வந்தது.

‘माभून्निश्शेषसिद्धिः तदपि गुणविदस्स्फीतनिस्सीमरत्ने मध्ये हारं निधेयं महति जहति किं मौक्तिकं लब्धमर्घ्यौ ॥ என்று ஸ்வாமியே ஸாதித்தபடி ப்ரக்ருதம் விஷயத்திற்கு அநுகுணமான ஸ்வாமி தேசிகன் ஸாதித்த எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் ஏதோ முடிந்ததை எழுதலானேன்.

அதிகரணஸாராவளியில் ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணத்தில் ஸ்வாமியால் ஸாதிக்கப்பட்ட பின்வரும் ச்லோகத்தின் பாவமும் ப்ரக்ருதவிஷயத்திற்கு எவ்வளவு அநுகுணமாக இருக்கிறதென்பதைக் காணலாம்.

आनन्दानन्त्यमाह श्रुतिरिह हि यतो वाच इत्यादिकस्याः विश्रान्तिः श्रान्तिमात्रादिति च निगदिता यामुनाचार्यवर्यैः । न ह्यानन्दोन्मितिस्स्याद्विधिशतवचनेऽप्यस्य यद्वद् नभोवत् तच्चोक्तं भूभृदण्वोरुदधिपतितयोर्मज्जने को विशेषः ॥

இந்த ச்லோகத்தின் பாவத்தை எழுதுமுன் ஸங்க்ஷிப்தபதார்த்தம் இதற்கு விஷயமான ஆனந்தவல்லி ச்ருதியை முன்னடி எழுதிக்கொள்ளுகிறேன்.

‘स एको मानुष आनन्दः । ते ये शतं मानुष आनन्दाः । स एको मनुष्यगन्धर्वाणामानन्दः । श्रोत्रियस्यचाकामहतस्य । ते ये शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः । स एको देवगन्धर्वाणामानन्दः । श्रोत्रियस्यचाकामहतस्य । ... ... स एकः प्रजापतेरानन्दः । ते ये शतं प्रजापतेरानन्दाः । स एको ब्रह्मण आनन्दः । श्रोत्रियस्यचाकामहतस्य । इति ॥

ப்ரக்ருதம் ச்லோகத்தில் முதல் பாதத்தில் **यतो वाचो निवर्तन्ते** என்கிற ச்ருதியானது ப்ரஹ்மானந்தம் வாங்மனஸாபரிச்சேத்யமானதால் அது அனந்தமானதென்று சொல்லலாயிற்று. அப்படிக்கிருப்பினும் ப்ரஹ்மானந்தம் வேதவேத்யமாயிற்றே, அப்படியிருக்க அதற்கு எப்படி ஆநந்த்யம் சொல்ல முடியும்? என்கிற ஆசங்கையின் மேல் இரண்டாம் பாதத்தில் பூர்வாசார்யர்களின் திருவுள்ளத்தை எழுதுகிறார்.

ஸ்ரீ ஆளவந்தார் ப்ரஹ்மானந்தம் வேதவேத்யமென்பதால் ப்ரஹ்மானந்தம் பூராவும் வேதவேத்யமென்றதாகாது. ஏனென்றால் மனுஷ்யானந்தம் முதல் சதுர்முகப்ரஹ்மாவரை சதகுணிதோத்தரக்ரமமாக ஆனந்தத்தைப் பெருக்கிச் சொல்லி கடைசியில் தாத்பர்யந்தமாக **यतो वाचो निवर्तन्ते** என்று சொன்னதால் ப்ரஹ்மானந்தம் பூராவையும் வேதம் ஸ்தோத்ரம் பண்ணினதாகாது. ஆகையால் ப்ரஹ்மானந்தம் பூராவும் வேதவேத்யமாகாது ஆனதால் அது அனந்தம் என்று சொல்லக் குறையில்லை என்கிறார். இதைத்தான் ஸ்ரீ ஆளவந்தார் பின்வரும் ச்லோகத்தால் ஸாதித்தார்

‘यद्वा श्रमावधि यथामतिवाप्यशक्ताः
स्तौम्येवमेव खलु तेऽपि सदा स्तुवन्तः ।
वेदाश्चतुर्मुखमुखाश्च महार्णवान्तः
को मज्जतोरणुकुलाचलयोर्विशेषः ॥

இந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை பிந்தி நான்காம் பாதத்தின் விஷயமாக எடுக்குங்கால் விஸ்தாரம் எழுதிக்கொள்கிறேன்.

பிறகு மூன்றும் பாதம்— **‘नह्यानन्दोन्मितिस्स्याद्विधिशतवचनेऽप्यस्य यद्वद् नभोवत्’** என்பதால் ஆனந்தவல்லியில் **‘स एको मानुष आनन्दः’** என்று ஆரம்பித்தவிடத்தில் மனுஷ்யஸ்தானத்தில் **‘स एको ब्रह्मण आनन्दः’** என்று சொன்ன அநேகம் சதுர்முகர்களை வைத்து அது முதல் ச்ருதியில் சொன்ன ப்ரகாரம் சதகுணிதோத்தரக்ரமமாக சதுர்முகன்வரை ஆநந்தத்தை நூறு நூறு மடங்காக ஒவ்வொரு படியிலும் பெருக்கிப் பார்த்தாலும்கூட ப்ரஹ

மானந்தத்தின் எல்லையைக் கண்டுபிடிக்கக் கூடுமோ என்கிற கேள்வியைப் பரிஹரிக்கிறார் **अस्य यष्टया नभोवत्** என்று. லௌகிக த்ருஷ்டாந்தத்தில் ஒருவன் ஒரு கெஜக்கோலைக் கொண்டு ஆகாசத்தை அளக்க ப்ரயத்னப்பட்டால் அது எப்படி உபஹாஸ்யமோ அப்படியே அல்பீயஸர்களான சதுர்முகாதிகளின் ஆனந்தத்தைவிட்டு அனந்தமான ப்ரஹ்மானந்தத்தின் எல்லையை அளவிட முயல்வது ஸாத்யமில்லாதது என்கிறார். இதையே ஸ்ரீ ஆளவந்தாரும் பின்வருமாறு அருளிச்செய்கிறார்:—

उपर्युपर्यब्जभुवोऽपि पूरुषान् प्रकल्प्य ते ये शतमित्यनुक्रमात् । गिरस्त्वदेकैकगुणावधीप्सया सदा स्थिता नोद्यमतोतिशेरते ॥

இந்த இடத்தில் **गिरस्त्वदेकैकगुणावधीप्सया** என்பதால் ஆனந்தவல்லியில் **'सैषा आनन्दस्य मीमांसा भवति'** என்றாரம்பித்து ஆனந்தமாகி ஒரு குணத்தைச் சொல்ல ஆரம்பித்த ச்ருதி எந்த இடத்தில் ஆரம்பித்ததோ அதற்குமேல் கொஞ்சமும் போக முடியாததால் அப்படி முடிவில்லாத ஒரு விஷயத்தில் ப்ரவ்ருத்திப்பதை விட்டு **व्यतिरेकमुखेन** ப்ரஹ்மானந்தத்தின் பரிமாணத்தைக் கணக்கிட்டு விடுவோமென்றெண்ணி **'यतो वाचो निवर्तन्ते'** என்று நிவ்ருத்திபரமாக ஆரம்பித்ததென்றார்.

நான்காம் பாதம்—

'तच्चोक्तं भूभृदण्वोरुदधिपतितयोर्मज्जने को विशेषः,' என்பது இங்கு ஸ்தோத்ரரத்னத்தில் **'कोमज्जतोरणुकुलाचलयोर्विशेषः'** என்று ஸாதித்த லௌகிக த்ருஷ்டாந்தத்தை ஸ்ரீதேசிகனும் அதே வாக்யத்தை ப்ரயோகித்தருளியிருக்கிறார். அதாவதுவேதங்களென்னலோகோத்தர ஜ்ஞாநாதிக்யர்களான சதுர்முகாதிகள் என்ன எல்லோரும் உம்மை ஸதா ஸ்தோத்ரம் செய்கிறார்கள். ஸாமான்யமான அடியேனும் சக்த்யநுஸாரம் புத்திக்கெட்டினவரை ஸ்தோத்ரம் செய்கிறேன். ஆனால் எனக்கும் அவர்களுக்கும் இது விஷயத்தில் யாதொரு வாசியுமிருப்பதாகத் தெரியவில்லை என்றார்.

இந்த இடத்தில் சதுர்முகாதிகள் நித்யர்களாச்சே; அப்படியிருக்க நித்யமான வேதங்களோடுசேர்த்து **सदास्तुवन्तः**, என்றுசொன்னது உபபந்நமோ என்றாலோ அதற்கு நிர்வாஹம் வேதங்கள் ஸ்வரூபநிவ்ருத்த்யதயா ஸதாஸ்தோத்ரம் செய்கின்றனஎன்பது உபபந்நமே. **'तद्विप्रासो विपन्यवो जागृवांसः समिन्धते'** என்பதால்நித்யஸூரிகள் ஸதா ஸ்தோத்ரம்செய்கிறார்களெனக் குறையில்லை. அதிகாரி புருஷர்களான சதுர்முகாதிகளோ அநித்யர்களானாலும் யாவததிகாரம் ப்ரவாஹ நித்யத்தால் யதாகாலம் ஸதா ஸ்தோத்ரம் செய்கிறார்கள் என்பது திருவுள்ளம்.

இந்த இடத்தில் ஸ்ரீ ஆளவந்தார் சதுர்முகாதிகளையும் சொல்லி பிறகு தன்னையும் அதே அளவில் வைத்து யதாசக்தி ஸ்தோத்ரம் செய்வதாகச் சொல்கிறாரே, சதுர்முகாதிகளுக்கும் இவருக்கும் ஸ்வரூபத்தில் விசேஷ தாரதம்யமிருக்கையிலே எப்படி இவர் தன்னை அவர்களுடன் துல்யராக நினைத்துச் சொல்கிறாரென்றாலோ அதற்கு ஸமாதானமருளுகிறார்.

சதுர்முகாதிகள் மனுஷ்யர்களில் உத்க்ருஷ்டமானவர்களைவிட ஸ்வரூபத்தில எவ்வளவோ உயர்ந்தவர்கள்தான். ஆனால் அவர்கள் பகவத்குணங்களில் ஏதாவது ஒன்றின் எல்லையை கண்டுபிடிப்பதில் ஸாமான்ய மனுஷ்யனாகிய என்னைவிட அதிகப்படியாக என்ன தான் செய்ய முடிந்தது. சதுர்முகாதிகளும் ஏதாவது ஒரு குணத்தின் எல்லையை பூரா கண்டறிந்தவர்களில்லை ஸாமான்யனாகிய நானும் அப்படியேதான். ஆனதுபற்றி பகவானின் ஆனந்தத்தின் எல்லையைக் கண்டுபிடிக்கமுடியாத விஷயத்தில் நானும் சதுர்முகாதிகளும் ஒன்றுதானே. இதில் என்ன தாரதம்யமிருக்கிறது என்கிறார். இதையே லோகத்ருஷ்டாந்தத்தால் நிரூபிக்கிறார் **'को मज्जतोरणुकुलाचलयोर्विशेषः'** என்று. அதாவது ஒரு அணுவுக்கும் ஒரு மலைக்கும் பரிமாணத்தில் கட்டாயம் தாரதம்யமிருக்கத்தான் செய்கிறது. அப்படியிருந்தும் ஒரு மலையையும் ஒரு அணுவையும் ஒரு மஹா ஸமுத்ரத்தில் தூக்கிப்போட்டால் கண்ணுக்குக்கூடத் தெரியாமல் அமிழ்ந்திப் போவதில் இரண்டும் துல்யமே.

அதே போல ஸ்வரூபத்தில் சதுர்முகாதிகளுக்கும் அடியேனுக்கும் தாரதம்யமிருப்பது ஒப்புக்கொண்ட விஷயமானாலும் பகவத்குணத்தின் எல்லை கண்டு பிடிக்க முடியாத விஷயத்

(இதன் தொடர்ச்சி 139-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

நூற்றெட்டுத் திருப்பதிகள்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

21. நந்திபுரவிண்ணகரம்- நாதன் கோயில்:- விண்ணகரப் பெருமாள். ஜகந்நாதன். நாதநாதப் பெருமாள். மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். செண்பகவல்லித் தாயார். மந்தார விமானம். நந்தி தீர்த்தம். நந்திக்கும், சிபிச்சக்ரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம். இவ்வூர் கும்பகோணத்திலிருந்து 3 மைல்.

திருமங்கையாழ்வார்:— 'தீதறுநிலத்து' 10.

22. திரு இந்தளூர்:- ஸுகந்த வநநாதன். மருவினிய மைந்தன். கிழக்கே திருமுகமண்டலம். வீரசயனம். சந்திரசாபவிமோசனவல்லி. புண்டரீகவல்லி. வேதசக்ர விமானம். இந்து புஷ்கரிணி. சந்திரனுக்கு ப்ரத்யக்ஷம். சந்த்ரனுக்கு சாபம் நீங்கியதால் (இந்து சந்த்ரன்) இந்தளூராயிற்று. இவ்வூர் மாயவரம் ஜங்ஷனிலிருந்து 3 மைல்.

திருமங்கையாழ்வார்:- நும்மை 10. 'அன்னவுருவில்' 'இந்தளூரந்தணனே' ஆக பா. 11

23. திருச்சித்திரகூடம்:- கோவிந்தராஜன். கிழக்கே திருமுகமண்டலம். போக சயனம். புண்டரீகவல்லித் தாயார். ஸாத்விக விமானம். புண்டரீக தீர்த்தம். தில்லை மூவாயிரவருக்கு ப்ரத்யக்ஷம். பெருமாள் தேவர்கள் முனிவர்களுடன் கொலுவீற்றிருந்த ஸ்தலம். வடக்கேயுள்ள சித்ரகூடத்தைப்போல் இச் சித்ரகூடமும் ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகன் திருவுள்ளத்திற்கு உகப்பானது என்கிறார்கள். சிதம்பரம் ஸ்டேஷனிலிருந்து 1மைல்.

குலசேகராழ்வார்:- அங்கணெடுமதிள் 11.

திருமங்கையழ்வார்:- ஊன்வாட 10. வாடமருது10. 'தென் தில்லைச் சித்திரகூடத் தென் செல்வனே' ஆக பா 32.

24. காழிச்சீராமவிண்ணகரம்;- தாடாளன். திருவிக்ரமமூர்த்தி. கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். மட்டவிழுங்குழலித்தாயார். புஷ்கலாவர்த்த விமானம். சக்ர தீர்த்தம். சங்கபுஷ்கரிணி. அஷ்டகோண மஹர்ஷிக்கு ப்ரத்யக்ஷம். இவ்வூர் சீயாழி ஸ்டேஷனிலிருந்து $\frac{1}{2}$ மைல்

திருமங்கையாழ்வார்:- ஒரு குறளாய் 10.

25. கூடலூர்:- வையங்காத்த பெருமாள் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். பத்மாஸனவல்லித் தாயார். சுத்தஸத்வ விமானம். சக்ர தீர்த்தம். காவிரி நதி. நந்தக முனிக்கு ப்ரத்யக்ஷம். தேவர்கள் பெருமாளை ஸேவிக்கக் கூடி வந்தபடியால் கூடலூராயிற்று. பாபநாசம் ஸ்டேஷனிலிருந்து 5 மைலில் இவ்வூர் உள்ளது.

திருமங்கையாழ்வார்:-தாந்தம் பெருமை10.

26. திருக்கண்ணங்குடி:- ச்யாமளமேனிப் பெருமாள். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். அரவிந்தவல்லி நாச்சியார். உத்பல விமானம். ராவண புஷ்கரிணி. ப்ருகு சைத்யருக்கும் கௌதமமுனிக்கும் ப்ரத்யக்ஷம். கீவளூர் ஸ்டேஷனிலிருந்து $1\frac{1}{2}$ மைலில் இவ்வூர் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்:- வங்கமாமுன்னீர் 10.

27. திருக்கண்ணமங்கை:- பக்தவத்ஸலப் பெருமாள். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். அபிஷேகவல்லித் தாயார். உத்பல விமானம். தர்சன புஷ்கரிணி. வருணனுக்கும், ரோமசனுக்கும் ப்ரத்யக்ஷம். இந்த க்ஷேத்ரம் திருவாரூரிலிருந்து 4 மைலில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:-பெரும்புற 10. 'ஒரு நற்சுற்றம்' 'மண்ணாடும் விண்ணாடும்' 'பேராலி, 'என்னுடைய' ஆக பா 14.

28. கவித்தலம்:- கஜேந்த்ரவரதர், கிழக்கே திருமுகமண்டலம். புஜங்கசயனம். ரமாமணிவல்லித் தாயார். ககநாக்ருதி விமானம். கஜேந்த்ர புஷ்கரிணி. கபில தீர்த்தம். கஜேந்திரனுக்கும், ஆஞ்சநேயருக்கும் ப்ரத்யக்ஷம். பாபநாசத்திலிருந்து கபிஸ்தலம் 2 மைல்.

திருமங்கையாழ்வார்:- 'கூற்றமும் சாரா'.

29. திருவெள்ளியங்குடி:- கோலவில்லிராமன். கிழக்கே திருமுகமண்டலம். புஜங்கசயனம். மரகதவல்லி நாச்சியார். புஷ்கலாவர்த்த விமானம். சுக்ர புஷ்கரிணி. ப்ரஹ்ம தீர்த்தம், கதளீ வ்ருக்ஷம், சுக்ரன், ப்ரஹ்மா,

இந்திரன், பராங்குசர்க்கு ப்ரத்யக்ஷம். திருவடைமருதூரிலிருந்து 5 மைலில் இவ்வூர் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்:- ஆய்ச்சியர் 10.

30. திருமணிமாடக்கோயில்:- நந்தாவிளக்குப் பெருமாள்- நாராயணன். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். புண்டரீகவல்லி. ப்ரணவவிமானம். இந்து புஷ்கரிணி. ஏகாதச ருத்ராருக்கும், இந்திரனுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழி ஸ்டேஷனிலிருந்து 5 மைலில் இவ்வூர் உள்ளது.

திருமங்கையாழ்வார்:- நந்தா விளக்கு 10. 'வேலையாலிலே' 'மன்னுமணிமாட' ஆக பா12.

31. திருவைகுந்த விண்ணகரம்:- வைகுந்த நாதன்-தாமரைக்கண்ணுடைபிரான். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வைகுந்தவல்லித் தாயார். அநந்தஸத்ய வர்த்தக விமானம். லக்ஷ்மி புஷ்கரிணி. உதங்க புஷ்கரிணி. விரஜை. உபரிசரவஸு ராஜாவுக்கும், உதங்க மஹரிஷிக்கும் ப்ரத்யக்ஷம். இத்தலம் சீயாழி ஸ்டேஷனிலிருந்து 5 மைல்.

திருமங்கையாழ்வார்:- சலங்கொண்ட 10.

32. திரு அரிமேய விண்ணகரம்:- குடமாடு கூத்தர். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். அம்ருதகடவல்லித் தாயார். உச்ச ச்ருங்க விமானம். கோடி தீர்த்தம். அம்ருத தீர்த்தம். உதங்க மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷம். இந்த க்ஷேத்ரம் சீயாழிக்குத் தெற்கே 1 மைலில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:- திருமடந்தை 10.

33. திருத்தேவனார் தொகை:- தெய்வ நாயகப் பெருமாள். மேற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். கடல் மகள் நாச்சியார். சோபன விமானம். சோபன புஷ்கரிணி. தேவஸபா புஷ்கரிணி. வஸிஷ்டருக்கு ப்ரத்யக்ஷம். இந்த க்ஷேத்ரம் சீயாழி ஸ்டேஷனிலிருந்து 4 மைலில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:- போதலந்த 10.

34. திருவண்புருடோத்தமம்:— புருஷோத்தமன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். புருஷோத்தம நாயகி. சஞ்சீவிக்ரஹ விமானம். திருப்பாற்கடல் தீர்த்தம். உபமந்யுவிற்கு ப்ரத்யக்ஷம். சீயாழி ஸ்டேஷனிலிருந்து 5 மைலிலுள்ளது இவ்வூர்.

திருமங்கையாழ்வார்:- கம்பமாகடல் 10.

35. திருச்செம்பொன் செய் கோயில்:- பேருளாளன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். அல்லிமாமலர் நாச்சியார். கனக விமானம். கனக தீர்த்தம். ஹேமபுஷ்கரிணி. ருத்ரனுக்கு ப்ரத்யக்ஷம். சீயாழியிலிருந்து 5 மைல்.

திருமங்கையாழ்வார்:- பேரணிந்து 10.

36. திருத்தெற்றியம்பலம்:— செங்கண்மால் கிழக்கே திருமுகமண்டலம். புஜங்க சயனம். செங்கமலவல்லித் தாயார். வேத விமானம். ஸூர்ய புஷ்கரிணி. செங்கமலவல்லி நாச்சியாருக்கும், அனந்தாழ்வானுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழியிலிருந்து 5 மைல்.

திருமங்கையாழ்வார்:-மாற்றரசர் 10.

37 திருமணிக்கூடம்:- மணிக்கூடநாயகன் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். திருமாமகள் நாச்சியார். கனக விமானம். சந்த்ர புஷ்கரிணி. பெரிய திருவடிக்கும், சந்த்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழியிலிருந்து $5\frac{1}{2}$ மைல்.

திருமங்கையாழ்வார்:-தூம்புடை 10.

38. திருக்காவளம்பாடி:-கோபாலக்ருஷ்ணன் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். மடவரல் மங்கை- செங்கமல நாச்சியார். ஸ்வயம்பு விமானம். தடமலர் பொய்கை. சேனைத்தலைவருக்கும், ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழி 7 மைலில் இவ்வூர் இருக்கின்றது.

திருமங்கையாழ்வார்:-தாவளந்து 10.

39 திருவெள்ளக்குளம்:— கண்ணன்- நாராயணன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். பூவார் திருமகள் நாச்சியார். தத்வத்யோதக விமானம். வெள்ளக்குளத் தீர்த்தம். இக்ஷ்வாகு வம்சத்தில் ச்வேதராஜனுக்கும், ருத்ரனுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழியிலிருந்து 4 மைல்.

திருமங்கையாழ்வார்:- கண்ணார் 10.

40. திருப்பார்த்தன் பள்ளி:- தாமரையாள் கேள்வன். மேற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். தாமரை நாயகி. நாராயண விமானம். ஸங்கஸரஸ், பார்த்தனுக்கும் வருணனுக்கும் ஏகாதச ருத்ரர்களுக்கும் ப்ரத்யக்ஷம். சீயாழியிலிருந்து 7 மைலில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:- கவளயானை 10.

(தொடரும்)

ஸ்ரீ:

நான் யார்?

உலகத்தில் எல்லோரும் ‘நான் போகிறேன்’ ‘நான் செய்தேன்’ என்று வ்யவஹரிக்கிறார்கள். இதில் நான் என்னும் சொல் எதைக் குறிக்கிறது? உடம்பைப்பற்றியதா? அல்லது அதைக் காட்டிலும் வேறு எதையாவதைக் குறிக்கிறதா? இதை நன்றாக யோசித்துப்பார் என்று ‘ஜடபாதர்’ என்கிற ரிஷி ‘ராஹூகணன்’ என்கிற அரசனைக் குறித்து ப்ரச்நம் செய்கிறார். கொஹமிதேவ தீவுணோ ஹஸ்ரீக்வா விஜுய வாயீலுவ் [‘நான் யார்’ என்பதை நன்றாக யோசிப்பாயாக] என்று. உலகத்தில் ‘நான் பெருத்தவன்’ ‘நான் இளைத்தவன்’ ‘நான் ப்ராஹ்மணன்’ என்கிற வ்யவஹாரங்களை கவனிக்குங்கால் ‘நான்’ என்பது உடம்பையே குறிப்பதாகத் தோன்றக்கூடும். அது ஸரியல்ல. தேஹம் என்கிற வடசொல்லுக்கு உடம்பு என்று அர்த்தமாதலால் தேஹம் என்கிற பதம் எந்த தாதுவிலிருந்து நிஷ்பந்நமாகிறது என்பதையும் ஆராயவேண்டும். வையாகரணர்கள் ‘திஹஉபசயெ’ என்கிற தாதுவின் பேரில் வஞ் ப்ரத்யயம் சேர்த்தால் தேஹ: என்று நிஷ்பந்நமாகிறதாக சொல்லுகிறார்கள். அப்பொழுது வளர்ச்சியைக்கொண்ட சரீரம் (உடம்பு) என்று தேஹம் என்னும் பதத்திற்குப் பொருளாக ஆகும். இதுபோல் சரீரம் என்பதும் ‘ஶீர்யதெ இதி ஶரீரம்’ என்கிற வ்யுத்பத்தியால் தேய்வையுடையது என்கிற அர்த்தமும் கிடைக்கிறது. ஆக வளர்ச்சி அழிவு இது முதலிய குணங்களையுடையது உடம்பு என்று முடிந்தது. தாய் வயிற்றிலிருந்து பிறந்து வளர்ந்து பாலகனாகவும் யுவாவாகவும் கடைசியில் கிழவனாகவும் ஆகிறது என்கிற விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ‘நான்’ என்பது இவ்விதமாக வளர்ந்தும் குறைந்தும் (தேய்ந்தும்) வருகிறதென்று எவருக்காவது தோன்றுகிறதா? அப்படித் தோன்றாமல் ஒரே விதமாக இருப்பதாகத் தோன்றினால் எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் உடம்பைக் காட்டிலும், மாறுதலில்லாத ‘நான்’ என்பது வேறு என்று எண்ணவேண்டாமா?

மேலும் உடம்பு பேசுகிறது; ஓடியாடியலைகிறது; தூங்கும்பொழுது ஒரு வேலையும் செய்யாமலும் தூக்கம் போனபிறகு மறுபடியும் வேலை செய்யத் துடங்குகிறது. இறக்கும் போது (சாகும்போது) அடியோடு கீழே விழுந்துவிடுகிறது. இந்த வேலைகளை உடம்பு தானாகவே செய்கிறதா? அல்லது அதைக்காட்டிலும் வேறான ‘நான்’ என்பது அதற்குள்ளிருந்து அதைக்கொண்டு கொஞ்சகாலம் வேலை செய்கிறதா? ‘நான்’ என்பது எப்பொழுது உடம்பை விட்டுவிடுகிறதோ அப்பொழுது உடம்பு கீழே விழுந்துவிடுகிறதா? என்பதை ஒவ்வொரு விவேகியும் நன்றாக யோசித்துப் பார்த்தால் உடம்பு தானாகவே இப்படி செய்கிறதென்பதைக் காட்டிலும் ‘நான்’ என்று ஒன்று இருந்து போய்விடுகிறது என்று சொல்வது பொருந்தி இருக்கிறது. இதுபோல் ‘நான்’ என்பது இந்த்ரியங்களில் ஒன்றாக இருக்குமா என்பதையும் கவனிக்கவேண்டும். இந்த்ரியம் என்பது என்னவென்பதை சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுவது உலகாநுபவத்திற்கு ஒத்து இருப்பதால் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுவோம். இந்த்ரியம் என்பது ஜீவன் ஒன்றைத் தெரிந்துகொள்வதற்கும், ஒரு வேலை செய்வதற்கும் அநுகூலமான கருவி (ஸாதனம்). இது மிகவும் ஸூக்ஷ்மமானது. ஒன்றைப் பார்ப்பதற்கு கருவியாக இருப்பது ‘கண்’ என்கிற இந்த்ரியம். அந்த இந்த்ரியம் இருக்கும் இடத்தையும் ‘கண்’ என்றே சொல்லுகிறார்கள். சப்தத்தைக் கேட்பதற்கு வேண்டிய கருவி ‘காது’. ஒரு வஸ்துவின் ருசியைத் தெரிவிக்கும் கருவி ‘நாக்கு’. ஒரு வஸ்துவின் வாஸனையைத் தெரிவிக்கும் கருவி ‘மூக்கு’. உஷ்ணம், சீதம் மெது முதலியதுகளைக் காட்டும் கருவி ‘த்வக்’ என்று சாஸ்த்ரஜ்ஞர்களின் வ்யவஹாரம்.

இவை ஐந்தும் ஜ்ஞானேந்த்ரியங்கள். பேசுவதற்கு வேண்டிய இந்த்ரியம் வாக்கு. இதுபோல் கை, கால், பாயு, உபஸ்தம் என்று மொத்தம் ஐந்து கர்மேந்த்ரியங்கள் உள்ளன. இந்த ஐந்து ஜ்ஞானேந்த்ரியங்களையும், ஐந்து கர்மேந்த்ரியங்களையும் தனக்கு ஸாதகமான வேலை செய்கிற கருவி மனது. இதுக்கு உள்ளுக்குள் இருக்கும் இந்த்ரியம் என்று பெயர். வண்டியில் பூட்டிய குதிரைகளுக்கு கடிவாளம் போல இந்த்ரியங்களுக்கு மனது முக்கிய கடிவாளமாகிறதென்று (ச்ருதி) வேதம் கூறுகிறது.

தெருவில் போகும் அழகான ஒரு ஸ்த்ரீயைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் மனது கலங்கும் என்று ஒருவன் நினைத்துத் தலையைத் திருப்பிக்கொள்ளுகிறான். ஒரு நொடிப் பொழுதில் அவனுடைய கண்கள் அவனையறியாது தெருவில் போகிற பெண்ணையே உற்று நோக்குகிறது. இதுபோல் சாப்பிடும்போதும் மாம்பழத்தை இலையில் பரிமாறுகிறார்கள். சாப்பிட உட்கார்ந்தவன் மாம்பழம் உடம்புக்குஆகாது, சாப்பிடவேண்டாமென்று எண்ணுகிறான். அடுத்த க்ஷணத்தில் அவனுடைய கை அவனை யறியாமல் அதை (மாம்பழத்தை) எடுத்து வாயில் போடுகிறது. அதையும் விழுங்குகிறான். இப்படியே கண்ணைப்போல மற்ற ஜ்ஞானேந்த்ரியங்களும், கையைப்போல மற்ற கர்மேந்த்ரியங்களும் அவனுக்குட்படாமல் தங்கள் தங்கள் வேலையைச் செய்கின்றன. மனதும் அப்படிப்பட்டதே.

ஒருவன் த்யானம் செய்ய உட்கார்ந்து ஒரு வஸ்துவையே நினைக்கவேண்டும், வேறொன்றையும் நினைக்கக்கூடாதென்று எண்ணுகிறான். உடனே மனது வெளி விஷயங்களில் அதிவேகமாக ஓடுகிறது. ஆகவே இந்த்ரியங்களில் எந்த இந்த்ரியமும் 'நான்' என்பதற்கு விஷயமாகமாட்டாது. 'நான்' என்பது உடம்பைக் காட்டிலும் வேறானதுபோல இந்த்ரியங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக ஒத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் 'நான்' என்பது கண் முதலிய இந்த்ரியங்களைத் தடுத்துத் திருப்பிவிடுகிறது.

அடுத்தபடியாக நான் என்பது ப்ராணனாகவும் ஆகாது. ஏனெனில் நான் என்பதும் தூங்கும்பொழுது ஒரு வேலையையும் செய்வதில்லை. அப்பொழுதும்கூட ப்ராணன் மூச்சு விடுகிறதாகிற உச்வாஸப்ரச்வாஸங்களை நிறுத்தாமல் செய்கிறது. ஆகவே நான் என்பது உடம்பு, இந்த்ரியங்கள், ப்ராணன் இவைகளைக்காட்டிலும் வேறுபட்டதாய் சேதநன் என்கிற பெயர் பெற்ற ஆத்மாவைக் குறிக்கிறது. அந்த ஆத்மாக்களை பகவான் அவரவர்களின் கர்மாநுகுணமாக அந்தந்த சரீரங்களில் ஜனிக்கும்படிச் செய்கிறான். அவ்வாத்மா அணுபரிமாணத்தை உடையவன். கண்களுக்குப் புலப்படாதவன். ஜ்ஞானமயன். அவனுக்கு ஜ்ஞானம் முதலிய குணங்களும் உண்டு. அந்தாத்மக்கள் எண்ணற்றவர்கள். அவர்கள் பத்தர், முக்தர், நித்யர் என மூவகைப்படுவர். அநாதியான கர்மபந்தத்திற்கு உட்பட்டு இந்த ஸம்ஸாரத்தில் உழல்பவர் பத்தர். கர்மபூமியில் நின்று ஸதாசார்ய ஸம்பந்தம் பெற்று பக்தி ப்ரபத்திகளுள் ஒன்றை யநுஷ்டித்து மோக்ஷத்தைப் பெற்றவர் முக்தர். எம்பெருமானைப்போல் ஒருகாலும் கர்மஸம்பந்தமேயின்றி அவனுக்கு எப்பொழுதும் கைங்கர்யம் செய்துகொண்டே இருப்பவர் நித்யர். அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகள் நித்யர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஜீவாத்மா தன்னைத் தவிர வேறொரு வஸ்துவை அறியும்போது தன்னுடைய ஜ்ஞானத்தாலேயே அறியவேண்டும். இந்த ஜ்ஞானம் தர்மபூதஜ்ஞானம் எனப்படும். அறிகிற ஜீவனும் ஜ்ஞானஸ்வரூபமாகவே இருப்பதால் ஜீவன் தர்மபூதஜ்ஞானமெனப்படுகிறான். தன்னை 'நான்' என்று அறியும்போது தர்மபூதஜ்ஞானம் வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஜீவன் தனக்குத்தானே 'நான் நான்' என்று தோன்றிக்கொண்டேயிருக்கிறான். இவ்வாறு இருப்பதற்குத்தான் 'ப்ரத்யக்த்வம்' என்று பெயர்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

* வைாசிமீ 2உ தாண்டிலிருந்து (தாண்டி லேயுள்ள சக்கர்குபீயிலிருந்து) 13 மைல் தூர முள்ள சாந்தவாஜீ எழுந்தருளினார்.

வைகாசிமீ 3ந்தேதி ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள ஷாஹாபுரா எழுந்தருளினார். 4உ ராத்திரி புறப்பட்டு 10மைல் தூர முள்ள பைராட் எழுந்தருளினார். (பைராட் என்பதுதான் விராடநகரம் என்று சொல்லுகிறார்கள்.) 6ந்தேதியும் அவ்விடமே எழுந்தருளியிருந்தார். 6ந்தேதி ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள தாணுகாஜீ எழுந்தருளினார். 7ந்தேதி புறப்பட்டு 16 மைல் தூர முள்ள அக்பர்புரா எழுந்தருளினார். 8ந்தேதி ராத்திரி அக்பர்புராவிலிருந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள அல்வார் எழுந்தருளினார். 9ந்தேதி ராத்திரி புறப்பட்டு 17 மைல் தூர முள்ள படோதாமேல் எழுந்தருளினார். 11ந் தேதியும் அவ்விடமே எழுந்தருளியிருந்து விட்டு அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள நகர் என்ற ஊருக்கு எழுந்தருளினார். 12ந்தேதி ராத்திரி புறப்பட்டு 15மைல் தூரமுள்ள பாஹஸுரா எழுந்தருளினார். 13ந் தேதி புறப்பட்டு 9மைல் தூரமுள்ள கோவர்த் தனம் எழுந்தருளினார். ஸ்ரீகோவர்த்தனம் ரங்காசாரியர் மடம் என்று சொல்லப்படும் லக்ஷ்மீநாராயணமந்திரத்தில் தனி மண்டபத் தில் எழுந்தருளியிருந்தார். அந்த மண்டபத் தின் பின் பக்கத்தில் மானஸ கங்கை என்று சொல்லுகிற (புஷ்கரதீர்த்தத்திற்கு ஸமான பரிமாணமும் நீளத்தில் அதிகமுமுள்ளதான) தடாகம் இருக்கிறது. அதன் கரையில்தான் பெருமாள் கோவர்த்தனத்தை ஒரு சிலையில் ஆவாஹனம் செய்து அந்த இடத்தில்தான் அதற்கு பூஜை செய்து அன்னகூடங்களை நிவேதனம் செய்யும்படிச் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். பெருமாளுக்காக ஒரு சிலை யும் ஏற்படுத்தி இதற்கும் கோவர்த்தன சிலைக் கும் கண் மலர், புஷ்பமாலைகள் பட்டு வஸ்தி ரங்கள் ஸமர்ப்பித்து பிராஹ்மணர்கள் பூஜை செய்கிறார்கள். அங்குதான் வருஷத்திற்கு ஒரு தரம் பெரிய அன்னகூட உத்ஸவம் நடக் கிறதாம். அங்கிருந்தே கோவர்த்தனபர்வதம் ஆரம்பிக்கிறது என்றும் சொல்கிறார்கள். பெருமாள் இளங்கன்று கொண்டு விளங்காய் எறிந்தபிறகு கங்கையை நீராட ஸ்மரித்ததாக வும் உடனே அங்கே கங்கை உதித்ததாகவும் அதனால் மானஸ கங்கை என்று பெயர் வந்த தாகவும் சொல்லுகிறார்கள்.

கோவர்த்தனபர்வதஸமீபத்தில் பெருமாள் இருந்துகொண்டு மதுரைக்கு விற்பனைக்குக் கொண்டுபோகும் வெண்ணைகளில் ஒரு பங்கு தன் பாகமாக வலிய வாங்கி அவைகளை கோ வர்த்தனத்தின் உச்சியில் சேகரித்து வைத்து உண்ணுமிடமென்று ஒரு இடத்தைக் காட்டு கிறார்கள். அங்கிருந்து கோவர்த்தனபர்வதத் தின் ஓரமாகவே செல்லும் மண் மிகுந்த ரஸ் தாவில் இரண்டு மைல் தூரம் போனால் கோவிந்தகுண்டம் என்கிற தீர்த்தம் மலையடி வாரத்தில் இருக்கிறது. அவ்விடத்தில்தான் தேவேந்திரன் பெருமாளுக்கு கோவிந்தபட் டாபிஷேகம் பண்ணினதாகச் சொல்லுகிறார் கள்.

'கல்லெடுத்துக் கல்மாரி காத்தான்' என்கிற படி கோவர்த்தனபர்வதம் கற்பாறையாகவிருக் கிறது. இரண்டு பர்லாங்கு அகலமும் ஸுமார் நாலைந்து மைல் நீளமுள்ள கற்குன்றாகத் தென் படுகிறது. கிரிப்ரதக்ஷிணம் சுற்றிவர ஸுமார் பதினொன்று மைல் ஆகிறதாம். 'அட்டுக்குவி'

---

* துர்முகி ௵ பங்குனி மாதம் 29ந்தேதி ராத்திரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள சலோதா எழுந்தருளினார். 29ந்தேதி ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள மந்தாஸூக்கு எழுந்தருளினார். (இதை போன ஸஞ்சிகையின் ஆரம்பத்தில் சேர்த்து வாசித்துக்கொள்ளவும்.)

யில் ஆழ்வார் வருணித்திருக்கிற அடையாளங்களில் முகமும் ப்ருஷ்டமும் சிவந்த குரங்கினங்கள்தான் இப்பொழுது கொஞ்சமாகத் தென்படுகின்றன. இந்திரனின் மழையின் காரணமாகக்கூட மண் மிகுந்து மார்வார் வரையில் பாலைவனமாக ஆகிவிட்டது என்று சொல்லலாம்போல் இருக்கிறது மண் மிகுதி.

அன்று காலை அபிகமன ஆராதனம் ஆனதும் புறப்பட்டு கோவர்த்தன குன்றத்தை ஸேவித்துக்கொண்டே கோவிந்தகுண்டம் வரையில் எழுந்தருளி திரும்பி எழுந்தருளியாயிற்று. பிருந்தாவனத்திலிருந்து அந்த கோவர்த்தனம் கத்திக்கு (மடத்திற்கு) உடையவர் என்று சொல்லப்படுகிற ஸ்ரீ ரங்காசாரியரும் (இன்னும் மைனர் நீங்காதபடியால் அவருக்குக் கார்டியனாயிருக்கும் அவருடைய ஜனகதகப்பனாரும்) ஸாயங்காலம் பிருந்தாவனத்திலிருந்து அங்கு வந்து ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து பிருந்தாவனத்திற்கு இங்கு இருந்தபடியே குறுக்கு வழி இருப்பதால் எழுந்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். அவ்விடம் அன்று ததீயாராதனம் பண்ணிவைத்தார்கள்.

14ந்தேதி திங்கட்கிழமை ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள மண் ரோட் வழியாக பிருந்தாவனம் எழுந்தருளினார். வண்டிகள் ரோடின் ஸௌகர்யத்தை உத்தேசித்து மதுரை வழி வந்து பிருந்தாவனம் வந்தன. பிருந்தாவனத்தில் கங்கைகொண்ட மண்டபம் (வஸந்தமண்டபம்) என்று சொல்லுகிற விசாலமான தோட்டத்தின் பங்களாவில் பெருமாள் எழுந்தருள ஏற்பாடு செய்து அங்கேயே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனார்கள். அவ்விடத்திற்கு எழுந்தருளி அவ்விடத்தைக் கடாக்ஷித்தருளினபோது தீர்த்தம் வெகு தூரத்திலிருந்து கொண்டுவரவேண்டியிருப்பதால் அஸௌகர்யமாயிருக்கும் என்று திருவுள்ளம் பற்றியதால் தீர்த்தவசதியுள்ள கோயிலின் வடவண்டை ப்ராகாரத்தில் மேல்புரமுள்ள இரண்டு மூன்று கட்டிடங்களை ஒழித்து அவ்விடம் எழுந்தருளப்பண்ணினார்கள். அன்று யமுனைக்கு எழுந்தருளி அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு எழுந்தருளியாயிற்று. அவ்விடமிருந்து யமுனை இரண்டு பர்லாங்கு தூரம் இருக்கிறது. பிறகு ஸ்ரீரங்கம் வட திருக்காவேரியில் மணலில் நடந்துசெல்லும் மாதிரி ஒரு பர்லாங்கு தூரம் நடந்து சென்ற பிறகு தீர்த்தம் தென்படுகிறது. ஆனால் அவ்விடத்தில் தீர்த்தம் கருப்பாகத் தென்படவில்லை. வட திருக்காவேரி தீர்த்தம் மாதிரிதான் தென்படுகிறது. பெரிய பெரிய ஆமைகள் கொஞ்சமும் பயமில்லாமல் ஜலத்திலும் கரையோரத்திலும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. அன்று வண்டிகள் வரத் தாமதமானபடியால் அபிகமனம் நடக்கக் கொஞ்சம் நாழிகையாயிற்று. அன்று ஸாயங்காலம் புறப்பட்டு ஸேவாகுஞ்சம், காளியமடு, ராஸகோஷ்டி நடந்ததாகச் சொல்லப்படும் இடம் இவைகளுக்கு எழுந்தருளியாயிற்று. ஸேவாகுஞ்சத்தில் முல்லைப் புதர்களும், தமாலவ்ருக்ஷங்களும் இருக்கின்றன. இதை ஒரு தோட்டமென்றே சொல்லலாம். அவ்விடத்தில் உள்ள குஞ்சமும் விருக்ஷங்களும் பெருமாள் திருவடி ஸம்பந்தம் பெற்றதென்றும் அதுமுதல் தொடர்ச்சியாகக் களைத்துக்கொண்டு வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். அவ்விடத்தில்தான் பெருமாள் ராதையுடன் விஹாரம் செய்ததாகவும் பிருந்தாவனபூமி முழுவதுமே லதாகுஞ்சவ்ருக்ஷங்களுடன் இருந்ததாகவும் அவைகள் எல்லாம் காலக்ரமத்தில் அழிந்துவிட்டதாகவும் இதொன்று மட்டில் காப்பாற்றப்பட்டு வருவதாகவும் இப்பவும் ராத்திரியில் அவ்விடத்தில் பெருமாள் ராதையுடன் எழுந்தருளுவதாக ஐதிஹ்யம் இருப்பதால் யாரும் ராத்திரியில் அங்கு தங்குவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். அவ்விடம் பெருமாள் விஹாரம் செய்யும்போது லவிதை என்கிற கோபஸ்த்ரீ ச்ரமத்தினால் தீர்த்தம் அபேக்ஷித்ததாகவும் அவளுக்காகப் பெருமாளுடைய ஸங்கல்பத்தால் தீர்த்தம் ஆவிர்ப்பவித்ததாகவும் அதற்கு லவிதாகுண்டம் என்று பெயரென்றும் சொல்லுகிறார்கள். அதை நடவாபியாகக் கட்டி அதில் ஒருவரும் இறங்காதபடி காப்பாற்றி வருகிறார்கள். அந்த தோட்டத்தை ப்ரதக்ஷி

ணமாய் வரும்படி கல்லினால் பாதை செய்திருக்கிறார்கள். அங்கு எழுந்தருளி இரண்டு தடவை வலம் செய்து கொண்டு அவ்விடமிருந்து காளியமடுவுக்கு எழுந்தருளினார். காளியமடு இருந்ததாகவும் இப்போது இருக்கும் கடம்பவ்ருக்ஷமும் அந்த வ்ருக்ஷத்திலிருந்து தான் கிளர்ந்தது என்றும் சொல்லப்படும் இடத்திற்கு நான்கு பர்லாங்கு கிழக்கே தான் யமுனை ஓடுகிறது. பிருந்தாவனத்திலேயே யமுனை வடக்கிலிருந்து தெற்கு முகமாக ப்ரவஹிக்கிறது. அங்கே படித்துறை மட்டில் கட்டியிருக்கிறார்கள். யமுனை கரை புரண்டோடும் காலத்தில் அவ்விடம் ஜலம் ஓடும். அதைப் பார்க்கும்போது காஞ்சியில் தூப்புல் ஸந்நிதி வாசலில் முன்னாள் வேகவதி ஓடிக்கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் புளினமாக (மணற்பாங்காக) இருந்த இடம் (இப்பொழுது பெரிய ரோடாக மாறியிருக்கிறது.) ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. 'வேகவதீ புளின கேளிநரஸிம்ஹம்' என்று சொல்லுகிறபடியால் புளினமாகத்தான் இருந்திருக்கவேணும். அங்கிருந்து ராஸக்ரீடை நடந்ததாகச் சொல்லுமிடத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் ராஸக்ரீடையை சுவற்றில் சித்தரித்து எழுதியிருக்கிறார்கள். அவ்விடத்தில் நிம்பார்க்க ஸம்ப்ரதாயஸ்தர்கள் பூஜை செய்கிறார்கள். அவ்விடமிருந்து ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. 16ந்தேதி அமாவாஸ்யையும் ரோஹிணி நக்ஷத்திரமும் ஒன்று சேர்ந்திருந்தபடியால் யமுனை தீர்த்தத்தினால் பெரிய பெருமாளுக்கும் ஸ்ரீகண்ணனுக்கும் திருமஞ்சனம் நடந்தது. 15ந்தேதி, 16ந்தேதி இரண்டு நாட்களும் பிருந்தாவனத்திலுள்ள ரங்கமந்திரத்தின் நிர்வாஹஸ்தர்கள் பூர்ணமாக ஆராதித்தார்கள்.

ஆண்டாளின் 'பட்டிமேய்ந்த' திருவாய்மொழியின் அனுபவத்தைக்கொண்டு ஸுமார் நூறு வருஷத்திற்கு முன்னால் அவ்விடம் பூர்ண செல்வாக்குடன் கோவர்த்தனபீடத்தில் அதிபதியாக இருந்த ஸ்ரீவில்லிபுத்தூரில் போல் கருடனுடன் ஸ்ரீகோவர்த்தனம் ரங்காசாரியர் ஸ்வாமி என்பவரால் ஸ்ரீ ஆண்டாளுக்கும் ரங்கமன்னாருக்கும் கோவில் கட்டி ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் இவர்களும் மற்றும் ரங்கநாதன் ராமன் ஸ்ரீநிவாஸன் இவர்களும் ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்டதாயும் சொல்லுகிறார்கள். மேல் கோபுரம் கீழ்கோபுரம் இரண்டும் உன்னதமாகவும், கோவில் விசாலமாகவும் ரொம்பவும் ரமணீயமாகவும் இருக்கிறது. கோவில் ஏற்படுத்தும்போது கோவில் நிர்மாதா மடாதிபதிகள் அவர்களுக்கும் முக்யமாக ஸ்ரீ அஹோபிலமடாதிபதிகளுக்கும் விசேஷ மரியாதைகள் செய்யும்படி எழுதியிருப்பதாயும் கோவில் ஏற்பட்ட பிறகு அந்தக் காலம் இப்பொழுதுதான் வந்திருப்பதாயும் அந்தப்படி எழுந்தருளி எல்லா மரியாதைகளையும் பெற்றுக்கொள்ளவேணும் என்று கோவில் நிர்வாகக் கமிட்டியில் ப்ரதானராயும் கோவர்த்தனபீடத்திற்கு உரியவர் என்றும் சொல்லப்படுகிற ஸ்ரீரங்காசாரியாரும் அவர் கார்ஷியனும் மற்றும் கோவில் துரை அர்ச்சகம் பரிசாரகம் மணியம் இவர்களும் ப்ரார்த்தித்தார்கள். புஷ்கரத்தில் நடக்கும் ரீதிகளில் சில ரீதிகள் இவ்விடம் இருப்பதால் அதிலுள்ள குறைபாடுகள் திருவுள்ளத்தில் படுகிறபடியால் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு ஏற்ற க்ரமப்படி வந்து மங்களாசாஸனம் பண்ணி மரியாதைகள் பெற்றுக்கொள்வது உசிதமாகப் படவில்லையென்று ஸாதிக்கும்படியாக இருந்தது. தனிப்பட்ட முறையில் ஸாயங்காலம் கோவிலுக்கு எழுந்தருளி எல்லா ஸந்நிதிகளிலுமுள்ள எம்பெருமான்களையும் ஸேவித்துக்கொண்டு மற்றுமுள்ள ஸந்நிவேசங்களையும் அவேக்ஷணம் பண்ணிக்கொண்டும் எழுந்தருளியாயிற்று. இப்படி எழுந்தருளினதில் எல்லோருக்கும் குறையிருந்தாலும் கடல்வண்ணன் கோயிலில் ஸ்ரீ அழகியசிங்கருக்கு உள்ள ஆஸக்தியையும் தானாகவே தனி முறையில் எழுந்தருளினதையும் பற்றி மகிழ்ச்சியும் அடைந்தார்கள். கோவர்த்தனம் ஸ்ரீரங்காசாரியர் ஸ்வாமியால் ஆராதிக்கப்பட்ட பெருமாள் என்று சொல்லப்பட்ட ஸ்ரீவேணுகோபாலன் ஸந்நிதியிலேயே அந்தப் பெருமாளை வெகு காலமாக ஆராதித்தவரான அந்த ஸ்வாமிக்கு

விக்ரஹமும்பிரதிஷ்டிதமாகி ஸ்ரீவேணுகோபாலனே ஆராதிக்கும் ஆராதகரே அந்த ஸ்வாமி விக்ரஹத்திற்கும் ஆராதனம் செய்துவரும்படி இருந்தால் அது எவ்வளவு பொருத்தமாயும் உசிதமாயும் எல்லோராலும் கொண்டாடும்படியாயுமிருக்குமென்று அது விஷயத்தைப்பற்றி ஸ்ரீஸந்நிதி திருவுள்ளத்தைக் கேட்டவர்களிடம் ஸாதிக்கும்படியாக இருந்தது. அன்று மத்தியானம் அந்தக் கத்திக்கு உடையவர் என்று சொல்லப்பட்ட ஸ்ரீரங்காசாரியரை விசேஷித்தனுக்ரஹித்து பிரதம ரங்காசாரியர் மாதிரியாக விசேஷ ஜ்ஞானம் புகழ் இவைகளை அடையவேண்டியதற்கு வேண்டிய ப்ரயத்னம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஸாதித்துவிட்டு அதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை ஹிதப்ரவர்த்தகரான தேவர் செய்து வைக்கவேணுமென்று அவர் ஜனக தகப்பனாரைக் குறித்து ஸாதிக்கும்படியிருந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள வடமதுரைக்கு எழுந்தருளியாயிற்று. வைகாசி மீ 17வ அவ்விடம் யமுனைக்காட்டில் யமுனைத் துறையில் நீராட்டம் செய்தருளினார். அன்று ஸாயங்காலம் வடமதுரைப் பிறந்தவன் பிறந்தவிடம் என்று சொல்லப்படும் இடத்திற்கு எழுந்தருளினார். அந்த இடம் கஞ்சன் மாடங்கள் இருந்த இடம் என்று ஊஹிக்கும்படி மதிள்களின் அடிவாரமும் கட்டிடங்களும் அவைகள் இடிந்த மண் மேடுகளும் இருக்கின்றன. அவ்விடம் செல்லும் ரயில் பாதையும் இடிந்த மதிளின் அடிவாரத்திலேயே போகிறது. கண்ணன் பிறந்த காராகிருஹம் இவ்விடம்தான் என்று சொல்லுகிற ஒரு பெரிய மேடு இருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் துருஷ்கர்களின் ஆதிக்யமுள்ள காலத்தில் ஒரு பெரிய மசூதி கட்டப்பட்டிருக்கிறது. அதன் மற்றொரு பாகத்தில்தான் கண்ணன் ஆலயத்தை நிர்மாணிக்க ப்ரயத்னம் எடுத்துக்கொண்டிருக்கிறார்களாம். அதற்கும் சற்று தூரத்தில் கண்ணனின் ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

எந்தெந்த இடங்களை ஹிந்துக்கள் புனிதம் என்று கருதுகிறார்களோ அந்தந்த இடங்களிலோ அல்லது அதன் ப்ராகாரங்களிலோ தங்களுடைய மசூதியைக் கட்டுவது என்று துருஷ்கர்களின் வழக்கமாகிவிட்டது. திருவுள்ளூர் முதலிய தக்ஷிணபாரதத்தில்கூட இது பரவிவிட்டது. அந்த ரீதியில் பாரதபூமியையே விழுங்கிவிடாமல் பாகிஸ்தானோடு நல்ல வேளையாகநின்றார்களே என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இது அந்த இடத்திற்கு எழுந்தருளி கடாக்ஷித்தபோது ஸாதித்த வார்த்தைகளின் ஸாரம். 'துருஷ்கயவநாதிபி: ஜகதி ஜ்ரும்பமாணம்' என்று எந்த வேளையில் ஸாதித்தாரோ ஜ்ரும்பமாணமாகவே இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அதை பெருமாள்தான் ப்ரசமனம் பண்ணவேண்டும் என்றும் ஸாதித்தாயிற்று. டெல்லியிலிருந்து ஸ்ரீகோதண்டராமய்யங்கார் முதலிய பேர்கள் அவ்விடம் வந்து டெல்லி வழியாக ஹரித்துவாரம் எழுந்தருளுவது ஸுலபமென்றும் ஒரு நாள் டெல்லியில் எழுந்தருளிவிட்டு இப்பொழுதே எழுந்தருளிவிடலாமென்றும் பிறகு திரும்புகாலில் அதிக நாள் எழுந்தருளியிருக்கலாமென்றும் டெல்லி வாசிகளில் சிலரின் அபிப்ராயம் என்று விஜ்ஞாபித்தார்கள். அப்படிப் போவதில் 20 மைலுக்குமேல் அதிகமாகிறது என்றும் இஷ்டப்படி ஒரு நாள் தங்கிவிட்டுப் போக எல்லோரும் அபிப்ராயப்படமாட்டார்களென்றும் திரும்புகாலில்தான் எழுந்தருளப் போவதாக ஸாதித்தாயிற்று. அன்று ராத்திரி அதை விட்டுப் புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள ராயா என்கிற ஊருக்கு எழுந்தருளினார். அன்று ராத்திரி அங்கிருந்து 15மைல் தூரமுள்ள ....எழுந்தருளினார். வைகாசிமீ 19வ ராத்திரி புறப்பட்டு 13மைல் தூரமுள்ள அலிகார் என்கிற ஊருக்கு ஸமீபத்திலுள்ள ஒரு நந்தவனத்தில் (பங்களாவில்) எழுந்தருளியிருந்தார். 20வ ராத்திரி புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள பர்த்திரி என்ற ஊருக்கு எழுந்தருளினார். அவ்விடத்தில் ஸ்ரீமத்கீதாபஷ்யக்ரந்தகாலக்ஷேபம் சாற்று

முறை நடந்தது. 21உ ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள அரனியாம் எழுந்தருளினார். 22ந்தேதி ராத்திரி புறப்பட்டு 11மைல் தூரமுள்ள கூர்ஜா எழுந்தருளினார். 24ந்தேதி அவ்விடமே எழுந்தருளியிருந்தார்.

ஹேவிளம்பி வருஷம் வைகாசிமீ 24உ ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள புலந்த்சஹர் என்ற ஊருக்கு எழுந்தருளினார் 25உ ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள 'குலாவ்டீ' என்கிற கிராமத்திற்கு எழுந்தருளினார். 26ந்தேதி சனிக்கிழமை ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள ஹப்பூர் எழுந்தருளினார். அவ்விடம் துவாதசி ததீயாராதனமும் பெரிய பெருமாளுக்கு ஸ்வாதித் திருமஞ்சனமும் நடந்தது. அன்று பிரதோஷ ஆராதனமும் அவ்விடமே நடந்தது. டில்லியிலிருந்து சக்ரவர்த்தியாச்சாரியர் முதலியவர்களும் அன்று ஸாயங்காலம் ஸ்ரீ. உப. வே. வித்வான் புதுக்கோட்டை மாஜி தானாதிகாரி காளி ஸ்ரீ ரங்காசாரியரும், அவர் குமாரரும் அவ்விடம் வந்து ஸ்ரீ அழகியசிங்கரையும் பெருமாளையும் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு அவசியம் டில்லிக்கு எழுந்தருளவேண்டும் என்றும், பெருமாளை கொஞ்சகாலம் ஆராதிப்பதற்காக டில்லி வாஸிகள் கமிட்டி ஏற்படுத்தி விசேஷ ப்ரயத்னங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்சார்பில் அதை விஜ்ஞாபித்து ப்ரார்த்திப்பதற்காகவே தாங்கள் வந்ததாகவும் விஜ்ஞாபித்தார்கள். அன்று ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள கர்கௌதா எழுந்தருளினார். அங்கு நம்மாழ்வார் திருநக்ஷத்திரம் சாற்றுமுறை ஸம்பாவனைகள் கோஷ்டிகள் நடந்தன. அன்று ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள மீரட் நகரத்திற்கு எழுந்தருளினார். 29ந்தேதி ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள கடோரா என்கிற கிராமத்திற்கு எழுந்தருளினார். வைகாசிமீ 30ந்தேதி, 31ந்தேதி இரண்டு தினமும் அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்தார். இன்னும் ஒரு வாரத்தில் ஹரித்வாரம் எழுந்தருளுவார். அவ்விடம் எழுந்தருளின பிறகு கால ஸௌகர்யம் இடஸௌகர்யம் மற்றும் பல ஸௌகர்யங்களிருந்தால் பதரிகாச்ரமம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம். அவ்விடம் போனபிறகுதான் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் எங்கு நடக்கிறது என்று நிச்சயமாகும். அநேகமாக ஹரித்வாரத்திலோ, ஹ்ருஷீகேசத்திலோ ஸங்கல்பம் நடக்கலாம்.

(தொடரும்)

திருத்தம்:—

துன்முகி ௵ பங்குனிமீ ஸஞ்சிகையில் 68-வது பக்கத்தில் 2-வது பத்தியில் ரீவா ஸமஸ்தானத்தில் முன்னம் ராஜகுருவாயிருந்த ஸ்ரீராகவாசாரியர் என்பதை பதரிப்ரபந்நாசாரியர் என்று வாசிக்கவேண்டும்.

ஹேவிளம்பி ௵ சித்திரை மீ ஸஞ்சிகையில் 93-வது பக்கத்தில் 2-வது பத்தியில் பிருந்தாவனத்தில் ஸ்ரீபகவத்ராமானுஜாசாரியர் பீடாதிபர் என்று சொல்லப்படுகிற ஸ்ரீரகுநாதாசாரியர் என்பவரைப்பற்றி குறிப்பிட்டிருப்பதை பிருந்தாவனத்தில் கண்யமாயுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் அங்கு எழுந்தருளியிருக்கும்பொழுது 'ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா' சித்திரைமீ ஸஞ்சிகையில் ஸஞ்சாரக்ரமத்தைத் தாங்கள் பார்த்ததாகவும் ஸ்ரீபகவத்ராமானுஜாசாரியர் பீடாதிபர் ஸ்ரீரகுநாதாசாரியர் என்பவர் ஒருவருமில்லை என்றும் ரகுநாதாசாரியர் இன்னாரென்றும் அவர் தானே தன்னைப் பீடாதிபதியாகச் சொல்லிக்கொண்டு பிறர்களை ஏமாற்றிவரும் ரீதியில் ஸ்ரீ ஸந்நிதிக்கும் வந்ததைத் தவிர அவர் பீடாதிபதியாய் இவ்விடத்தில் இல்லை; இப்பொழுதும் இப்பீடமில்லை என்றும் விஜ்ஞாபித்தார்கள். அவர் பூர்வ வ்ருத்தம் அறிந்தவர்களிடம் அவர் அம்மாதிரி சொல்லிக்கொள்ளமாட்டார் என்றும் விஜ்ஞாபித்தார்கள். அதன் உண்மையை வாசகர்களே தீர்மானித்துக்கொள்கிறது.

ஸ்ரீ:

ஸாதுக்களின் தர்சனம்

ஸ்ரீ அழகியசிங்கர் வடதேச ஸஞ்சாரத்தில் பட்டணமிருந்து விடாமல் தொடர்ந்து அனுயாத்ரையாக வருவதுடன் பிரதிதினம் திருப்பாவை நித்யானுஸந்தானம் கோஷ்டியில் அந்வயித்து கைங்கர்யம் பண்ணிக்கொண்டும் பெருமாள் ஸேவை, ஆசார்யஸேவை இவைகளுடன் கிரந்தசதுஷ்டயகாலக்ஷேபமும் செய்து வரும்படியான பாக்யம் அடியேனுக்கு ஜந்மாந்தரஸுக்ருதவசத்தால் நேர்ந்திருக்கிறது என்று சொல்வதுடன், ஸ்ரீ பெருமாளுடையவும், ஸ்ரீ அழகியசிங்கருடையவும் ப்ரதமகடாக்ஷத்தினாலேயே முக்யமாக ஏற்பட்டது என்று சொல்லவேண்டும் என்று அடியேனுடைய த்ருடமான அத்யவஸாயம்.

ஸஞ்சாரத்தில் கூட வருகையில் ஆங்காங்கு ஜனங்கள் வந்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்துக்கொண்டுவருவதை நேரில் அனுபவிப்பதினாலும் காலக்ஷேபங்களிலும் மற்றும் பல ஸந்தர்ப்பங்களிலும் ஸ்ரீ அழகியசிங்கரருளிச்செய்யும் நல்வார்த்தைகளைக் கேட்பதினாலும் சாஸ்த்ரங்களிலுள்ள மிக்க ஸாரமான அர்த்தங்கள் மனதில்தெளிவாய்பபதிகின்றன.

ஆங்காங்கு ஜனங்கள் பால ஸ்த்ரீ வ்ருத்தர்கள் உள்பட 'மஹாத்மாவின் தர்சனம்வேணும்' 'மஹாராஜாவின் தர்சனம் வேணும்' என்று அவரவர்களுடைய ப்ரதிபத்திக்குத் தக்கபடி கோஷித்துக்கொண்டு காலை முதல் ராத்திரி ஸஞ்சாரம் புறப்படும் வரையில் வந்துகொண்டேயிருக்கிறார்கள். அவர்களுடைய நிர்பந்தத்தை அனுஸரித்து அனுஷ்டான ஆராதன காலங்கள் தவிரமற்ற காலங்களில் எல்லாம் தன்னுடைய ச்ரமத்தையும் பாராமல் அவர்கள் ஸேவித்துப் போகும்படி அனுமதித்தாகிறது. அவர்கள் 'தர்சனம்வேணும்' 'தர்சனம்வேணும்' என்று' அதை ப்ரதானமாக அபேக்ஷிப்பதிலிருந்து 'நஹ்யம்மயாநி தீர்த்தாநி ந தேவா ம்ருச்சிலாமயா: । தே புநந்த்யுருகாலேந தர்சநாதேவ ஸாதவ: ॥' (ஜலரூபமான பரிசுத்தங்களும் ம்ருத்சிலாமயமான தேவதைகளும் அப்படி பரிசுத்தம் செய்வதில்லை. அப்படி பரிசுத்தம் செய்தாலும் சிரகால பரிசயத்தினால்தான். ஸாதுக்களோவென்றால் தன்னுடைய தர்சனமாத்ரத்தினாலேயே பரிசுத்தம் செய்கிறார்கள்.) இந்த ச்லோகம் நினைவிற்கு வந்து இந்த ச்லோகத்தில் முக்யமாகச் சொல்லப்பட்ட ஸாதுக்களின் தர்சனத்தை வட இந்தியர்கள் தீர்த்தயாத்ரை தேவஸேவாதிகளைக் காட்டிலும் எவ்வளவு பெரியதாக மதிக்கிறார்கள் என்பது மனதில் தெளிவாகப் பட்டது.

பகவந்நாமஸங்கீர்த்தனவைபவத்தைப்பற்றி 'நாம நவ்ஸ்தே' இத்யாதி ச்லோகங்களைக் கொண்டு அவ்வப்போது ப்ரஸக்த ஸந்தர்ப்பங்களில் விரிவாக ஸாதித்துக்கொண்டிருக்கச் செய்தேயும், ஹப்பூர் முகாமில் டில்லியிலிருந்து ஸ்ரீ. உப வே. வித்வான் புதுக்கோட்டை மாஜி தானாதிகாரி காளி ரங்காசாரியர்ஸ்வாமி தன் புத்ராதிகளுடன் வந்து தெண்டன் ஸமர்ப்பித்து ப்ரார்த்தித்தார். அன்று ப்ரதோஷாராதனம் முடிந்ததும் நாமபஜன கோஷ்டி நடந்தபிறகு 'கச்சதாம் தூரமத்வாநம் த்ருஷ்ணாஸம்மூடசேதஸாம் । பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்' என்ற ச்லோகத்தை ஸாதித்து விட்டு 'புண்டரீகாக்ஷ' என்றவிடத்தில் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்ய' என்று தாம் அநுஸந்தித்து வருவதாயும் இவ்வளவு தூரயாத்ரைக்கும் அந்நாமஸங்கீர்த்தனம்தான் தாரகமாக இருக்கிறதென்றும் அவரிடம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியிருந்தது. வெகு தூரம் செல்கிறவர்களாயும் பசி, தாகம் முதலியவைகளால் மோஹம் அடைந்தவர்களாயும் (அடையக்கூடியவர்களாயும்) உள்ளவர்களுக்கு ஸ்ரீபுண்டரீகாக்ஷனான பகவானுடைய நாமஸங்கீர்த்தனமான அம்ருதமானது பாதேயமாக இருக்கிறது என்று இதன் பொருள். ப்ராக்ருதத்தில் வெகுதூரம் யாத்ரை செய்கிறவர்களாயும் யாத்ரையிலுள்ள ஆசையினால் யாத்ரை

பில் ஏற்படும்ரமங்கள் மனதில் படாதிருக்கிற நம்போன்றவர்களுக்கும் ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய மூன்று நாமங்களின் ஸங்கீர்த்தனமாகிற அம்ருதமே எப்போதும் பாதேயமாக இருக்கிறது' என்று பொருளை திருவுள்ளம் பற்றி அப்படி ஸாதிக்கும்படியிருந்தது. பெருமாளுடைய நாமஸங்கீர்த்தனம் அம்ருதபாதேயமாகஆவது ஸ்ரீஸந்நிதியில் நடக்கும் ஸ்ரீந்ருஸிம்ஹநாமஸங்கீர்த்தனகோஷ்டியில் அந்வயித்திருக்கிற அடியேன் போன்றவர்களுக்குத்தான் தெரியும்.

ஸ்ரீ:

ஸஹதர்மசாரிணீ

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஓர் காதலி காதலனுக்கு தன்னுடைய தாழ்ந்த நிலையைச் சுட்டிக்கடிதம் வரைவதாக ப்ரஸித்திபெற்ற ஓர் கவி வருமாறு கூறினான்:- 'புராசுபூத் அஸ்மாகம் ப்ரதமம் அவிபிந்நா தநுரியம்'. அன்பனே! நமக்கு மணமான புதிதில் நீர், நான், எனப் பிரிக்கக் கூடாதபடி ஈருயிரும் ஓர் உடலுமாய் இருந்தோம். 'ததோ நு த்வம் ப்ரேயாந் வயமபி ஹதாசா: ப்ரியதமா:'. பிறகு சில நாள் கழிந்தவாறே, நீர் காதலன் நான் காதலி என்றும், சில நாள் நீர் என்னை வந்து கூடுவது, பிறகு நெடுங்காலம் நான் பிரிவால் வாடுவது என்றும் நிலைமை மாறி வரத் தொடங்கியது. 'இதாநீம் நாதஸ்த்வம் வயமபி ச தாரா:'. இப்போதைய நிலையோவெனில் இதுதான். இப்போது நீர் எனக்குப் பதி. நான் உமக்கு தர்மபத்நீ. நீர் எனக்கு பர்த்தா என்பதை என் ஜீவனத்திற்குப்படியிட்டு நிரூபிக்கிறீர். நானும் தர்மபத்நீ என்பதை நீர் வைதிக அக்நி கார்யாதிகள் செய்யும்போது அருகிருந்து உலகிற்கு வெளியிடுகிறேன். இவ்வளவே இன்று உம்மோடு நமக்குள்ள உறவு என்று அவள் மனமுடைந்து கடிதம் வரைந்தாள் என்கிறான் கவி. இதனால் ஆண் பெண் இரு பாலருக்கும் பரஸ்பரம் பால் உணர்ச்சியில் பலபல படிகள் வடிவங்கள் உண்டென்று தேறுகிறது. அதிலும் ஆண் பெண் பாலர்கள் முதன் முறை ஸந்திக்கும்போது இருக்கும் நெருக்கம், நேசம் பந்தம் செல்லச் செல்ல தளர்ந்து தேய்ந்து உரு மாறி வருகிறதென்றும், சிலர் விஷயத்தில் இங்கு காட்டப்பட்டதாகிறது. அதற்கு அவரவர் உள்ளப் பாங்கும், உடற்கூறும் பெரிதும் காரணமாக இருக்கலாம். இவ்விதம் இவைகள் முன்னுக்குப் பின் குறைந்து வரும் தருணத்தில் தம்பதிகளுள் ஒருவருக்கொருவர் மநக்லேசமடைவதும் வெறுத்தொதுக்குவதும் ஸஹஜமாக நிகழ்வதொன்றாகும்.

ஆனால் ஸ்ரீசக்ரவர்த்திக்கும் ஸ்ரீஜநகநந்திநிக்கும் இச்சுலோகத்தில் காட்டப்பட்ட அத்தனை உறவுகளும் மற்றும் சிலதுகளோடு என்றென்றும் மாறுபாடு அடையாமல் அழியாமல் இருந்துவந்தன என்று மஹர்ஷி காட்டுவது மிக மிக ரஸம். அதைச் சிறிது அநுபவிப்போம்.

அசோகவனத்தில் திருவடி பிராட்டியை முதன் முறைக் கண்டார். கண்டதும் இவ்விதம் நினைக்கலானார். 'இயம் ஸா யத்க்ருதே ராம: சதுர்ப்பி: பரிதப்யதே | காருண்யேந ஆந்ருசம்ஸ்யேந சோகேந மதநேந ச ||' ஆ! அந்த தேவியே இவள். இவள் பொருட்டல்லவா அம்மஹாபுருஷன் இரவு பகல் நான்கு வித வேதனைகளைத் தாங்கவும் மாட்டாமல் அநுபவித்தும் வருகிறான். ஆஹா! இத்தேவி விஷயத்தில் ஸ்ரீராமசந்த்ரன் திருவுள்ளம் பலபடியிலன்றோ கலங்கித் தவிக்கிறது. ஓர் ப்ரபு மெய்யிருளில் ரத்நதீபம் ஏந்தி வரச் சென்று கொண்டு இருப்பானாய் அவ்வளவில் கள்ளர்களால் அத்தீபம் பறிக்கப்பட்டபோது அப்பிரபுவின் மனம் என்னவெல்லாம் எண்ணி எண்ணி வருந்தும். தற்சமயம் மேலும் செல்லவொண்ணாதபடி இருளில் உறுதுணையாய் இருந்த தீபம் தொலைந்து போயிற்றே என்று ஓர் ஸமயம் வருந்துவான். மற்றொரு ஸமயம் 'அது கிடக்க' நாம் முன்னாள் எவ்வளவு பொருள் தந்து பெருவிலைக்கு அந்த ரத்னதீபம் பெற்றோம். அவ்விதம் உயர்ந்த ஓர் வஸ்து

கை நழுவிச் சென்றதே என்று மற்றோர் ஸம
யம் நினைப்பான் அதுவே போல் பிராட்
டியை இங்கு இழந்து பெருமாளும், ஓர் ஸம
யம் காருண்யத்தாலும், மறு ஸமயம் அவளை
ரக்ஷிக்காமல்போனோமே என்ற கழிவிரக்கத்தா
லும் ஒருபுறம் சோகத்தாலும் மறுபுறம் காதல்
நோயாலும் இவ்விதம் நான்குவித கஷ்டங்க
ளையும் சேர்த்தனுபவிக்கிறார்.

இவ்விதமிருக்க இவைகளில் பிராட்டியுடன்
எந்த ஸந்தர்ப்பத்தையிட்டு பெருமாளுக்கு
எந்த துக்கம் உண்டாயிற்று என்பதையும்
திருவடிபெமேலே நிரூபிக்கிறார். ,ஸ்த்ரீ ப்ர
ணஷ்டேதி காருண்யாத்' பெண்ணென்றால்
பேயுமல்லவா இறங்கும். புருஷோத்தமனாகிய
நாம் அவளை பெண்ணென்றும் பொதுவிலேகரு
தாது போனோமே? ரக்ஷியாது போனோமே?
என்றுபிராட்டியைப்பெண்ணெனப்பொதுவில்
நிறுத்தி ஓர் கண்ணோட்டம்விட்டாஅப்போது
பெருமாள் திருவுள்ளத்தில் ஏற்படுவது இரக்க
உணர்ச்சி. மேலும் ,ஆச்ரிதேத்யாந்ருசம்ஸ்
யத:'.பிராட்டிக்குப் பெருமாளுடன் ஆசார்ய
ஸம்பந்தமும் உண்டு. அவள் ஆச்ரிதை, சிஷ்
யை, 'ஏஷா சிஷ்யா ச தாஸீ ச' 'பேசா தர்ம:
த்வத்த ஏவ மயா ச்ருத:' என்று ப்ரஸித்த
மல்லவா? நமக்கு அவன் சத்ருவாயினும் இப்
போது சரணடைந்தவனானால் அவனை மற்றொ
ருவர் நலிய நாம் கண்டிருக்கலாகாது. அவ்வி
தம் சரணாகதனை நலியக் கொடுத்தவனுக்கு
எவ்விதத்திலும் நற்கதி கிடையாது என்று
சாஸ்த்ரம் சொல்லும். ஆகையால் தண்டகா
ரண்யத்தில் நம்மை ஆச்ரயித்து அப்பலத்தால்
கொடிய ம்ருகங்களையும் கண்டஞ்சாமல் நம்
மைப் பின் தொடர்ந்து வந்த ஓர் சிஷ்யையை—
ஆச்ரிதையை ஆதரிக்கத்தவறினோமே? அளித்
துக் காக்க நாம் முன் வரவில்லையே என்ற ஆந்
ருசம்ஸ்யம்— அதாவது கழிவிரக்கம் மற்றோர்
புறம் பெருமாளை வாட்டுகிறது. இது தவிர
'பத்நீ நஷ்டேதி சோகேந—' பத்நீ என்று
எண்ணிப்பார்த்தவளவில் சோகஸாகரம் வந்து
பெருமாளை மூழ்கடிக்கிறது. 'பத்யுர் நோ
யஜ்ஞஸம்யோகே' என்று பத்நீசப்தத்தின்
பொருள் பற்றி பாணினி கூறுகிறார். யாகாதி
அக்நிகார்யத்தில் பர்த்தாவுடன் கூட அந்வயிக்
கும்வள் பத்நீ ஆவாள். முன்னாளில் யௌவ
ராஜ்யம் பெருமாளுக்கு ப்ராப்தமாக இருந்த
அளவில் பெருமாளைக்கொண்டு தான் அடைய
ஆசைப்பட்ட சிலதுகளைப் பிராட்டி வாய்
விட்டு பெருமாள் ஸந்நிதியில் விண்ணப்பம்
செய்கிறாள். 'ராஜ்யம் த்விஜாதிபிர் ஜுஷ்டம்
ராஜஸூயாபிஷேசநம் | கர்த்துமர்ஹதி தே
ராஜா வாஸவஸ்யேவ லோகக்ருத் ||' நமது அய்
யர் மஹாராஜர் நல்ல குடிகள் நிறைந்த நாட்
டையும். அத்துடன் ராஜஸூயம் என்னும்
யாகத்தில் அவப்ருத ஸ்நாநத்தையும் உமக்குக்
கிடைக்கச் செய்து வைக்கட்டும். (ராஜ்யமற்
றவன் அந்த யாகத்தைச் செய்யலாகாதாகை
யால் இவ்விதம் கூறப்பட்டது) இந்திரனுக்கு
ப்ரஹ்மா போல் எல்லா சிறப்புகளையும் செய்து
வைக்கப்படும். 'தீக்ஷிதம் வ்ரதஸம்பந்நம் வரா
ஜிநதரம் சுசிம் | குரங்கச்ருங்கபாணிம் ச பச்
யந்தீ த்வா பஜாம்யஹம் ||' யாகத்திற்கு தீக்ஷை
செய்துகொண்ட யஜமானவேஷத்தில் மான்
தோல் உடுத்தி மான் கொம்பு கையில் கட்டித்
தொங்க மிக பரிசுத்தராய் இருக்கும் நிலையில்
உம்மை நான் கண்டு களிக்கவேண்டும் என்று
ளிறே பிராட்டி. ராஜகுமாரியாய் இருந்து
வைத்தும் கர்மயோகியாகிய ஜநகர் திருமகளா
கையால் இவ்விதம் சொன்னாள். இவளன்றோ
தர்மபத்நீ. தர்மபத்நீ என்ற ஒன்றை நினைத்
தாலே போதும் துக்கம் வந்து நெஞ்சை அள்
ளுகிறது.

நான்காவதாக ஓர் தோற்றப். 'ப்ரியேதி
மதநேந ச' இதுதான் வெகு அஸஹ்ய வேத
னையைத் தருவது. பிரிவில் காதலர்கள் கலங்
குவதற்குக் காரணம் காட்டவேண்டாம். என்
ப்ரியையல்லவா அவள் என்ற எண்ணம்
ஒன்றே அமையும். அக்நியைவாரிச் சொரிந்தாற்
போல் வாட்டும். 'அவகாஹ்யார்ணவம் ஸ்வப்
ஸ்யே' என்றாரே பெருமாள் உள்ளுலர்த்தும்
காதல் நோயுடன் கடற்கரைக்கு வந்த ஸ்ரீராம
சந்த்ரன் சடக்கெனக் கடலில் இறங்கி சயனித்
தால் தான் தாபம் தீருமோவென நினைக்கிறார்.
'நமே துக்கம் ப்ரியா தூரே ந மே ஸீதா
ஹ்ருதே திவா | ஏதத் ஏவ அநுசோசாமி

வயேஸ்யாஹ்ய திவர்த்ததே ॥' — நாம் இக்கரையிலும் அவள் அக்கரையிலுமாகப் பிரிந்தோமே? என நான் கலங்கவில்லை. பிரிவும் கூடலும் ஒன்றைத் தொடர்ந்து ஒன்று வரும் என்றும் எதுவும் நிலை நிற்காது என்றும் நான் அறிந்ததே யாகையால் நமது திவ்ய மஹிஷியைத் தீண்டி ஓர் ராக்ஷஸப் பயல் கொண்டுபோவதே, அது நமக்கு ஒரு அவத்யம் அல்லவோ என்னும் நான் சிந்தைப் படவில்லை. அவன் தலையைக் கிள்ளி எறிந்து உயிர் கொலை செய்து இட்டிடு கொள்ளுகைக்கு நமக்குத் தெரியுமாதலால். ஆனால் நாம் எதற்குக் கலங்குகிறோம் என்றால்:- ரஸிகர்கள் சொல்லுவர்கள்:—காதலர்கள் கைகோர்த்து போக ப்ரவாஹத்தில் வயஸ்ஸு என்னும் படி வழியாக இழியும் போது ஒரு க்ஷணம் முன் பெற்றதுடலாக லாபமாகக் கருதி கடுக த்வரிக்க வேணும் என்று. ஆதலால் அவளுடைய வயஸ்ஸு வீணே கழிகிறதே என்று கருதி நான் வ்யஸநமடைகிறேன் என்று பெருமாள் பணிக்கும்படி. ஆதலால் ஸீதையைக் காதலி எனக் கருதும்போது உண்டாகும் மனவெழுச்சிக்கு ஈடும் இணையும் கிடையாது. இது ஓர் நான்காவதான துன்பம் பெருமாளுக்கு என்று மஹர்ஷி அழகுற வெளியிட்டக் கருத்துக்களிவை. ஆக இதனால் பிராட்டியுடன் பெருமாளுக்கு அநேகவித ஸம்பந்தங்கள் உண்டு. இவைகள் உலகில் போல் ஒன்றுக்கொன்று முரணின்றி ஒருங்கே கூடியிருப்பன என்பது புலனாகிறது.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் பிராட்டி பெருமாளுக்கு ஸஹதர்மசாரிணியாய் நிற்பதே. தர்மசாரிணீ என்றவிடத்தில் ஸஹ தர்மாசரணத்தையே தனக்கு இயல்பாகக் கொண்டவர் என்ற பொருள் தோன்றுவதும் குறிப்பிடத்தக்கது. இவை எல்லாவற்றையும் நினைத்துத்தான் ஸ்ரீஜநகர் அன்று 'ஸஹதர்மசரீ தவ' என்று உள்ளுறைப் பொருளாகக் கொண்டு கூறினர்.

கல்யாண மண்டபம்

சிங்கப்பெருமாள்கோயிலில் ப்ராஹ்மணர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து கல்யாணமண்டபம் பெரியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இக் கட்டிடத்தில் ஸகல வஸதிகளும் நிறைந்திருக்கின்றன. ஸந்நிதி வீதியில் உள்ள இந்த இடத்தில் ஸுமார் 500 பேர்களுக்குமேல் கல்யாணங்கட்கு வந்து தங்கியிருப்பதற்கு ஸௌகர்யமுண்டு. கல்யாணங்கட்கு வேண்டிய எல்லாவித ஸௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படும். விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

க. வ. பாஷ்யம் ஐயங்கார்,
"ராமானுஜ விலாஸ்"
கோல்லஞ்சாவடி, குரோம்பேட்டை.
மதராஸ்.

ஸ்ரீ:

என்னுடைய இன்னமுது

[சித்திரை பௌர்ணமி இரவில் முழுமதி விண்மணிகளான தாரகைகள் சூழ வெண்ணிலவைப் பொழிந்துகொண்டு பவனி வருகிறான். வானவீதியில் கந்தர்வமிதுனம் ஒன்று அழகிய தேரின்மீதூர்ந்து மண்ணுலகின் இன்னழகை யநுபவித்துக் கொண்டு செல்லுகிறது. அவ்வமயம் கீழே மிகக்கோலாஹலமான காட்சி யொன்று அவர்களின் கண்களுக்குப் புலப்படுகிறது. அதைப் பார்த்து பெண் ஆணைக் கேட்கிறது.]

ப்ரீயதர்சினீ:– நாத! கீழே நமக்கு எதிரில் காணப்படும் காட்சி யாது? ஆகாசத்தினின்றும் சந்திரன் அநேக உருக்கொண்டு பூவுலகின்கண் பவனி வருகிறானா? அல்லது மண்ணுலகின் மாட்சியை அநேக உருவங்கொண்டு கண்டு களிக்கின்றானா?

மஞ்ஜுபாஷணன்:– ப்ரியே! நீ காண்பது சந்திரனல்ல, சந்திரனின் ப்ரதிபிம்பங்களே. நாமிப்பொழுது செல்லுமிடத்திற்குக் கீழாக எவ்வுட்கிடந்த எழிலரசு தன் மஹோத்ஸவத்தின் கடைசிதினமாகிய இன்று கண்ணாடிப் பல்லக்கில் திருவீதி யலங்கரித்தருளுகிறான். அவன் வீற்றிருக்கும் பல்லக்கின் கண்ணாடிகளில் ப்ரதிபலிக்கும் சந்த்ரபிம்பங்களே இவைகள். வா, நாமும் கீழே சென்று எம்பெருமானை வணங்கி வருவோம்.

(இருவரும் விமானத்தினின்றும் இறங்கி எம்பெருமானை வணங்குகின்றனர்.)

ப்ரியதர்சினீ;– ப்ரிய! இவ்வெம்பெருமான் எவ்வளவு அழகாக ஸேவை ஸாதிக்கின்றார். ஸேவித்தீர்களா? இவ்வடிவழகு வாய்ந்த எம்பெருமானின் திருநாமந்தான் என்னவோ? இவனுறையும் திருக்கோயில் விமானத்தின் பெயரும், இத்திவ்யத்தலத்தின் நாமதேயமும் தானென்னவென்பதையும் எனக்கு நன்கு விளக்குவீராக.

மஞ்ஜுபாஷணன்:– என்னினுயிரே! வா. தெளிவாக உரைக்கிறேன். முதலில் எம்பெருமானைப் பாதாதி கேசாந்தமாகக் கண்குளிரப் பருகு. "தன்னடியார்க்கினியன்" என்றும், "முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த புனிதன்" என்றும், "என்னுடைய இன்னமுதை எவ்வுட் பெருமலையை" என்றும், "நாகத்தணை .... திரு எவ்வுள்" என்றும், "वेदान्तमृग्यमपि नित्यमशेषदृश्यं" "सर्वाश्रयः सर्वसुहृत्" என்றும் பலபடியாகப் புகழப்பட்ட எம்பெருமான் ஸ்ரீராகவன் சமரீபாரஸமலங்க்ருதமான திருமுடியுடனும் பல பல ஆபரண விசேஷங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியுடனும், எதிரில் நின்று அவனழகைப் பருகி மகிழ்ந்திடும் ஸ்ரீபூமிகளுடனும் உயர்ந்த மாலைகளைத் தரித்தவனாய்க்கொண்டும் காண்போருள்ளம் கொள்ளை கொள்ளும் வண்ணம் ஸேவை ஸாதிக்கிறான்.

ப்ரியதர்சினீ:– அன்ப! கண்டேன் கண்டேன் கண்டேன் கண்ணுக்கினியனை– மனத்துக்கினியானை– உலகுக்கே இனியவனைக் கண்டேன். வாருங்கள் சற்று இவ்வெம்பெருமானுடன் அநுயாத்ரை செய்வோம். இவ்வெம்பெருமானின் தூமுருவலும் திருவடியிணையும் அஞ்சேல் என அருள் கொடுக்கும் அபயஹஸ்தமும், அகலகில்லேனிறையுமென்ற திருமார்பு நாச்சியாரும் என் மனதை விட்டகலமாட்டேனென்கின்றன. (என்று சொல்லிக்கொண்டே கணவனின் கரத்தைப் பற்றிக்கொண்டு அநுயாத்ரை செய்கிறாள். சிறிது தூரம் சென்றவுடன் ஓர் ரமணீயமான திருக்குளம் காணப்படுகின்றது. அதைப் பார்த்து) இத்திருக்குளத்தின் திருநாமம், ப்ரபாவம் இவைகளையும் சற்று விவரமாகக் கூறுங்கள்.

மஞ்ஜுபாஷணன்:– ஆம், நீ முதலில் கேட்டதை மறந்தேவிட்டேன். வா, இக்குளத்தினழகிய படியின்கண் அமர்ந்து உன் கேள்விகளுக்கு விடை பகருகிறேன்.

(இருவரும் குளத்தின் படிக்கட்டி லமர்ந்தனர்)

ப்ரியதர்சினீ;– நாத! இத்திவ்யக்ஷேத்ரத்தின் பெயர், இதன் விஸ்தீர்ணம் முதலியவைகளைத் தெளிவாகக் கூறுங்கள்.

மஞ்ஜுபாஷணன்:— க்ஷீரநதீ, த்ருஷத்வதீ, குசஸ்தலீ என்று பெயரையுடைய மூன்று புண்ய நதிகளின் மத்தியில் ஐந்து யோசனை விஸ்தீர்ணமுள்ள இத்திவ்யதேசத்தின் பெயர் புண்யாவர்த்தம் என்பதாம். இத்திவ்யதேசத்தில் எவனொருவன் சிறிதளவு புண்யமாகிலும் செய்கிறானோ, அவன் செய்த புண்யமானது பல பலவாக வ்ருத்தியடைந்து அவனுக்கு நற்கதியை உண்டாக்குகிறது. ஆகையாலேயே இதற்குப் புண்யாவர்த்தம் என்று பெயர் ஏற்பட்டது.

210740

ப்ரியதர்சிநீ:— நல்லது, 'எந்த இடத்தில் கருந்தட முகில்வண்ணன் உறைகின்ற திருக்கோயில் இருக்கின்றதோ, ஸமஸ்த பாப ஹாரியான புண்யதீர்த்தமுள்ளதோ, ஒரு ஆவ்ருத்தி ஒரு தர்மத்தை அநுஷ்டித்தாலும் அநேகாவ்ருத்யநுஷ்டான பலத்தைக் கொடுக்கும்படியான தபோவனமுள்ளதோ அந்த இடத்தில் வஸிக்குமவர்கள் முக்தி அடைகின்றார்கள்' என்று பெரியோர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட மஹிமை இத்திவ்யதேசத்திற்கு உண்டே போலும்.

மஞ்ஜுபாஷணன்:— ப்ரியே! நன்றாகச் சொன்னாய். மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற தலமிதுவே. இவ்வெம்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோவில் இதோ பக்கத்தில் இருக்கிறது இந்த விமானத்தின் பெயர் விஜயகோடி என்பதாம். இதோ நம் முன் எண்ணில் நீலமார் வண்டுண்டு வாழும் நெய்தலந்தண்கழனிதான் ஹ்ருத்தாபநாசிநீ என்று ப்ரஸித்திபெற்ற புண்யதீர்த்தம். இத்தலத்திற்கு வீக்ஷாரண்யம் என்றும் புண்யாவர்த்தமென்றும் பெயர் ப்ரஸித்தமாயுள்ளது. அதன் மஹிமையை முன்னமே சொல்லக் கேட்டாய். இவ்வெம்பெருமான் 'எவ்வுட்கிடந்தான்' என்றும், 'வெண்ணெயுண்டான்' என்றும், 'ஸ்ரீராகவன்' என்றும் மண்ணவரும் விண்ணவரும் வணங்கி வழிபடுமவனாக வஸுமதீமணாளனாய் ஸேவை ஸாதித்துவருகிறான்.

ப்ரியதர்சிநீ:— இம்மஹாபுருஷன் அலங்கரிக்கும் விமானம் விஜயகோடி என்றழைக்கப்படுவதற்கு ஏதேனும் காரணம் இருக்குமெனத் தோன்றுகிறது. தயவுசெய்து அதை அடியாளுக்கு உணர்த்துவீராக.

மஞ்ஜுபாஷணன்:— குதூஹலிநியே! நீ நினைத்தது முற்றிலும் உண்மையே. உன் ஸந்தேஹங்கள் யாதாயினும் ஸரி. கேள். ஸமாதானம் உரைக்கின்றேன் முன்னொருகாலத்தில் ஸ்ரீமானான நாராயணனுக்கும் மது கைடபன் என்கிற அஸுரர்களுக்கும் மஹாபயங்கரமானதோர் யுத்தம் உண்டாயிற்று. அப்பொழுது பகவான் இவ்விமானத்தின்கண் அமர்ந்து அஸுரர்களைத் திருவாழியாழ்வானால் ஸம்ஹரித்தருளினார். எம்பெருமானுக்கு விஜயத்தைக் கொடுத்தபடியால் இவ்விமானத்திற்கு விஜயகோடி என்ற பெயர் ப்ரஸித்தமாயுள்ளது. 'विजयं नाम तत्प्रोक्तं दिव्यमायतनं हरेः। यत्र स्थित्वा जगन्नाथो जितवान् मधुकैटभौ ॥' என்றன்றோ புராணச்லோகம்.

ப்ரியதர்சிநீ:— மிகவும் பொருத்தமான திருநாமம். மேலே சொல்லுங்கள்.

மஞ்ஜுபாஷணன்;- அடுத்தபடியாக புண்யதீர்த்தத்தின் மஹிமையைக் கேள். இவ்வுலகினில் எண்ணிறந்த புண்யதீர்த்தங்கள் விளங்காநிற்கின்றன. அவைகளுள் தலைசிறந்த புண்யதீர்த்தமிதுவே. ஏனெனில், ஒவ்வொரு புண்யதீர்த்தமும் ஒவ்வொரு காரணத்தைக் கொண்டு திருநாமமுடையதாகவுள்ளது. எப்படியென்னில், சந்த்ரபுஷ்கரிணீ என்றது சந்த்ரனுக்கு உதவி புரிந்தமையாலும், ஸ்வாமி புஷ்கரிணீ என்று தீர்த்தராஜனாயிருக்கையாலும், அனந்தஸரஸ் என்று திருவனந்தாழ்வானுக்கு உதவி புரிந்தமையாலும், நித்யபுஷ்கரிணீ என்று எப்பொழுதும் வற்றாத நீரையுடைத்தானமையாலும் உலகின்கண் அவ்வோ காரணத்தினால் ப்ரஸித்தியடைந்துள்ளது. இந்த ஸரஸ்ஸோவெனில் இன்னாருக்கென்று இடுவரையில்லாமல் ஸர்வ லோகங்களுடைய பாபதாபங்களைப் போக்கடிக்கிறேன் என்று கொடிகட்டித் திருநாமம் புனைந்து விளங்குகின்றது.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[ஹேமலம்பி ஞூ உத்தராயணம் - க்ரீஷ்ம ருது, மிதுந மீ 1957 ஜூன் - ஜூலை மீ]

15-6-57	ஆனி மீ 1வ	சனிக்கிழமை	சூன்யதிதி.
16-6-57	2வ	ஞாயிற்றுக்கிழமை	சூன்யதிதி.
21-6-57	7வ	வெள்ளிக்கிழமை	உத்திரட்டாதி, 23-வது பட்டம் ஸ்ரீவீரராகவ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
24-6-57	10வ	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
27-6-57	13வ	வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
28-6-57	14வ	வெள்ளிக்கிழமை	திருவாதிரை, 9-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
2-7-57	18வ	செவ்வாய்க்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
3-7-57	19வ	புதன்கிழமை	ஸப்தமி திதி.
6-7-57	22வ	சனிக்கிழமை	ஸ்வாதி, பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.
7-7-57	23வ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி திதி.
8-7-57	24வ	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம், சயந ஏகாதசி, அநுஷம், ஸ்ரீமந்நாதமுனிகள் திருநக்ஷத்ரம்.
11-7-57	27வ	வியாழக்கிழமை	○ பூர்ணிமை, சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்.
12-7-57	28வ	வெள்ளிக்கிழமை	உத்திராடம், 13-வது பட்டம் ஸ்ரீவீரராகவ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
14-7-57	30வ	ஞாயிற்றுக்கிழமை	மிதுந க்ருஷ்ண த்ருதீயை திதி.
15-7-57	31வ	திங்கட்கிழமை	மிதுந க்ருஷ்ண சதுர்த்தி திதி.

[தக்ஷிணாயணம் - க்ரீஷ்ம ருது, கர்க்கடக மீ]

16-7-57	ஆடி மீ 1வ	செவ்வாய்க்கிழமை	கடகரவி 11-53, தக்ஷிணாயநபுண்யகாலம், ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்யதிதி.
17-7-57	2வ	புதன்கிழமை	கடக க்ருஷ்ண ஷஷ்டி திதி.
18-7-57	3வ	வியாழக்கிழமை	அதிதி.
19-7-57	4வ	வெள்ளிக்கிழமை	ஸப்தமி திதி.
23-7-57	8வ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி, ரோகிணி, 22-வது பட்டம் ஸ்ரீமந் நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25-7-57	10வ	வியாழக்கிழமை	த்ரயோதசி - சதுர்தசி திதித்வயம்.
26-7-57	11வ	வெள்ளிக்கிழமை	● அமாவாஸ்யை
27-7-57	12வ	சனிக்கிழமை	புஷ்யம், 36-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-7-57	15வ	செவ்வாய்க்கிழமை	பூரம், ஸ்ரீ ஆண்டாள், 26-வது பட்டம் ஸ்ரீரங்க நாதயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம், திருவாடிப்பூரம்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

Regd. No. M. 4437.

போன் நெ. 112.

காஞ்சீபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்
வாங்க நம்பிக்கையான இடம்
புதிய ஜவுளிக்கடை

***

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,

184. காந்தி ரோடு, காஞ்சீபுரம்.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கிகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்ரி.